Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆனி 02 வியாழக்கிழமை (16.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 179

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## நள்ளிரவு வரை சாதகமான முடிபு இல்லை

# ஐ.ம.சு. கூட்டமைப்பில் இருந்து ஜே.வி.பி. இன்று வெளியேறும்

## பத்திரிகையாளர் மாநாட்டில் உத்தியோக பூர்வ அறிவிப்பு

(நமது நிருபர்)

பொதுக்கட்டமைப்பை கைவிடுவது குறித்து நேற்று நள்ளிரவு வரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிவிக்காததையடுத்து ஜே.வி.பி. இன்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் இருந்து விலகவுள்ளது. இதற்கான உத்தியோக பூர்வ அறிவிப்பை இன்று காலை கொழும்பு பொதுநூலகத்தில் வைத்து ஜே.வி.பி ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கவுள்ளது. (10ஆம் பக்கம் பார்க்க)

## கொலைக் குற்றவாளிகள் இருவருக்கு மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

புத்தூரில் கடந்த 2001ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைக்குற்றத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட குற்றவாளிகள் இருவருக்கு நேற்று யாழ்ப்பாண மேல்நீதிமன்றம் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளித்துள்ளது.

2001ஆம் ஆண்டு ஆனி மாதம் புத்தூரில் இராஜரட்ணம் உதய குமார் என்பவரை கொலைசெய் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் ஹெலி கொப்டர் மூலம் கேணல் சொர்ணம் திருமலை பயணம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் சொர்ணம் நேற்றுக்காலை 9மணியளவில் இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்தி மூலம் திருகோணமலைக்குச் சென்றுள்ளார்.

இவரை விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை கட்டளை தளபதி கேணல் பானு, விடுதலை புலிகளின் வடபோர்முனை கட்டளைத்தளபதி கேணல் தீபன், விடுதலைப்புலிகளின் கட்டளைத்தளபதி கேணல் ஜெயம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் தளபதிகள், போராளிகள் ஆகியோர் வழியனுப்பி வைத்தனர்.

கிழக்கில் இருந்து வன்னிக்கு வந்த விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளுக்கான உலங்கு வானூர்தி வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு கடந்த சில வாரங்களாக அரசு இழுத்தடிப்புச்செய்து வந்தது.

இதையடுத்து விடுதலைப்புலிகளின் தளபதிகளின் கிழக்குப் பயணத்திற்கு அரசு ஏற்பாடுகளை மேற்கொள்ளாவிடின் புலிகள் சுய பாதுகாப்புடன் வான், கடல், தரை வழிப்பயணங்களை மேற்கொள்ள நேரிடும் என்று விடுதலைப்புலிகள் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் நேற்று மாலை இளைஞனொருவர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதி முருகன் கோவிலுக்கு அருகில் நேற்று மாலை இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். பிரஸ்தாப இளைஞர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது அவ்ரைப் பின்தொடர்ந்து சென்றவர்கள் சுட்டுவிட்டு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இவரின் உடலில் மூன்று சூட்டுக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் கூறினர். கொல்லப்பட்டவர் மட்டு. கோயில்குளத்தைச் சேர்ந்த பொன்னையா சந்திரபவன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச-8)

## ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானம்

(கொழும்பு)

தற்போது ஜனாதிபதி எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலையில் உடனடியாக அரசாங்கத்தை அமைக்க ஐக்கிய தேசியக்கட்சி விரும்பவில்லை என்பதால் இவ்வருட முடிவில் ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

இவ்வருட முடிவுவரை பதவியில் இருப்பேனென ஜனாதிபதி தெரிவித்துள்ளபடியால் ஜனாதிபதித் தேர்தலை வருட இறுதியில் ஐ.தே.க.நடத்தத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கும், அரசுக்கும் அழுத்தம் பிரயோகிக்கும் நடைமுறையினை அக்கட்சி அடுத்தமாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளது. ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே தனது பிரசாரத்தை ஆரம்பித்துள்ள வேளையில் ஜே.வி.பி, சுதந்திரக்கட்சி போன்றன இன்னும் தனது ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேளை நாட்டை தொடர்ந்தும் வழி நடத்தமுடியாததால் ஜனாதிபதி உடனடியாக இராஜி (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு ஜனாதிபதியால் இழுத்தடிப்பு; விடுலைப்புலிகள் விசனம்

(கொழும்பு)

சுனாமிப்பேரலையின் மீள்அமைப்புக்கான பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதில் தாமதம் செய்து வரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது தமிழீழ விடுதலைப்புலிகள் விசனம் கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் சந்தித்துப் பேசினர்.

அச்சந்திப்பு குறித்து மறுநாள் கிளிநொச்சியில் தமிழீழ அரசியல் துறைபொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழு சந்தித்து பேசியது.

அச்சந்திப்புக்கள் தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு அவர் அளித்த செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதியின் அளவுக்கு மீறிய இழுத்தடிப்பு நடவடிக்கைகள் ஏமாற்றம் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதத்திற்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

### பெருமளவான மக்கள் பங்கேற்பு

(கொழும்பு)

இனவாதத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டைப் பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அரசியல் கட்சிகளும் பொதுஅமைப்புக்களும் இணைந்து மேற்கொண்டன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புதிய இடதுசாரி முன்னணி, ஜனநாயக இடதுசாரி முன்னணி உட்பட பல அரசியல் கட்சிகளும் பொது அமைப்புக்களும் கலந்துகொண்டன. பொதுக்கட்டமைப்பில் உடனடியாக கைச்சாத்திடுமாறு ஆர்ப்பாட்டத்தல் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். இவ்வார்ப்பாட்டத்தில் தமிழர், சிங்களவர் என பெருமளவினரானோர் கலந்து கொண்டனர்.(ச-8)

## மங்கள, அநுரா நேற்று சீனா பயணம்

(கொழும்பு)

தென்னிலங்கையில் பலதரப்பான அரசியல் சூழ்நிலை நிலவுகின்ற போதும் மூத்தஅமைச்சர்களான மங்கள சமரவீர, அநுரா பண்டாரநாயக்க ஆகியோர் நேற்று பீஜ்ஜிங் சென்றுள்ளனர். இவர்களுடன் பிரதியமைச்சர் ரிசாட் பதியூதீன், பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச இராஜபக்ஷ் ஆகியோரும் இலங்கை எயார்லைன்ஸ் விமானத்தில் பீஜ்ஜிங் சென்றுள்ளனர்.

அனைவரும் எதிர்வரும் ஞாயிற் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் வெடித்ததில் 2 பொலிஸார் படுகாயம்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா செட்டிக்குளம் பணிமனைப்பகுதியில் நேற்றுக்காலை 10மணியளவில் கிளைமோர் குண்டு வெடித்ததில் இரண்டு பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் செட்டிக்குளம் மன்னார் நெடுஞ்சாலையில் வீதி ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த கிளைமோர் குண்டு பொலிஸார் வீதிச் சோதனையில் ஈடுபட்டவேளை வெடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அக்குண்டு வெடிப்புக்கு விடுதலைப்புலிகளே காரணம் என்று செட்டிக்குளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குணரத்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து விடுதலைப்புலிகள் தமது கருத்தில் இச்சம்பவத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனத்தெரிவித்துள்ளனர், (ச-4,2)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பல்கலைக்கழக ஊழியர் சங்கம் இன்று அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக ஊழியர் சங்கம் பல்கலைக்கழக அனைத்துக் கல்வி சாராப் பணியாளர்களின் பங்களிப்புடன் இணைந்து இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதெனத் தீர்மானித்துள்ளது.

இந்த அடையாள வேலை நிறுத்தத்தின் பின்பும் சாதகமான பதில் கிடைக்கர்விட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவும் சங்கம் தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை உபகுழுவுக்கும பல்கலைக்கழகங்களின் தொழிற்சங்க கூட்டுக்குழுவுக்கும் இடையே சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி, பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் அனைத்துப பணியாளர்களினதும் சம்பள முரண்பாடுகளைக் கடந்த வருடம் ஜனவரி மாதம முதலாம் திகதி முதல் சீர் செய்து புதிய சம்பள அளவுத் திட்டமொன்றினை அமுலாக்குவதென எடுக்கப்பட்ட தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தாலேயே இவ்வேலை நிறுத்தம் நடைபெறவுள்ளது.

1.பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களின சம்பள முரண்பாடுகள் 01-01-2004 ஆம திகதி முதல் சீராக்கம் செய்யப்பட்டு அத் திகதியிலிருந்து புதிய சம்பள அளவுத்திட்டத்தினை உடனடியாக அமுல்படுத்தல் வேண்டும்.

2. புதிதாக பல்கலைக்கழக சேவையில் 04-03-1997 ஆம் திகதிக்கு பின்னா் இணைந்து கொண்ட சகல ஊழியர்களுக்கும் மாதாந்த இழப்பட்டுப் படியை (MCA) அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க உடனடியாக அமுல் செய்தல் வேண்டும்.

என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்தே இவ் வேலை நிறுத்தம நடைபெறவுள்ளது.

பாதுகாப்பு, நீர்விநியோகம் மற்றும் பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும அங்கத்தவர்கள் அன்றைய தினம் தமது வழமையான பணிகளையாற்றுவர். (அ)

## தினேஷ் - ஜனாதிபதி சந்திப்பு

(கொழும்பு)

மகாஜன எக்ஸத பெரமுன தலைவரும் நகர அபிவிருத்தி அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன அண்மையில ஜனாதிபதியைச் சந்தித்து பல விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இந்தப் பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு கைச்சாததிடவுள்ள உத்தேசப் பொதுக்கட்டமைப்பு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கூடிய விரைவில் தேர்தல்களை நடத்த வேண்டியதன் அவசியத்தைத் தான் ஜனாதிபதிக்கு வலியுறுத்தியுள்ளதாகவும், தேர்தலில் பங்கு கொள்வதன் மூலம் அந்தப் பிரதேச மக்கள் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மேலதிக பங்களிப்பை செய்ய முடியும் என்பதை ஜனாதிபதிக்கு எடுத்துரைத்ததாக வும் அவர் மேலும் தெரிவித்தார்.

மகாஜன எக்ஸத பெரமுன எந்தக்காரணம் கொண்டும் அரசாங்கத்தை விட்டு விலகவோ அல்லது அதற்குத் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தவோ மாட்டாது என தான் ஜனாதிபதிக்கு உறுதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும கூறினார். (து-9)

## மக்களுக்குத் தேவையானது நிரந்தர சமாதானம் - பிரதமர்

(கொழும்பு)



மக்கள் பயம், சந்தேகம் என்பன இல்லாமல் நிமமதியாக வாழக் கூடிய சூழலை உருவாக்க வேண் டிய காலம் வந்துள்ளதாகவும் நாட் டின அனைத்து மக்களும் நிரந்தர சமாதானத்தை எதிர்பார்த்திருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ரத்மலிஹந்த விகாரையில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள் ஆகிய அனைவரும் நாட்டின் சமாதானத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் சந்தேகமும், பயமும் அற்று ஒற்றுமையுடன் நிம்மதியாக வாழக்கூடிய நிலையை உருவாக்குவதற்கான காலம் கனிந்துள்ளதாகவும் பிரதமர் கூறினார். (து-9)


## சிறுவிளம்பரம்

### மலயாள பகவதி ஜோதிடாலயம்

**Pandit Nara Semanailu World Expert Astrologer**

இந்தியாவின் கர்நாடாவிலிருந்து வந்திருக்கும் சர்வதேச ஜோதிடர் பண்டிதர் நரசிம்ம நயுடு அவர்கள் ஓம் சிவசக்தி அருள் கொண்டு கைரேகை, பிறந்த திகதி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை, தொழில், வியாபார இரகசிகர விடயங்கள். வவாக, வாகனப் பொருத்தங்கள், கல்வி, குடும்ப ஒற்றுமைகள் மற்றும் எதிர்கால பலாபலன்களை அறிந்துகொள்ள தொடர்புகளுக்கு,

ஹோட்டல் பிள்ளையார் இன்
அறை இல.09,
31, மானிப்பாய் வீதி
யாழ்ப்பாணம்.
T.P - 0779122836
நேரம் காலை 9.00 -
இரவு 8.30 வரை
(9567)

## புதிய புத்தகம்

விற்பனையில் சாதனை செய்த 'இது இந்துமதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்' விலை ரூபா 80/=

பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி 222 2365
(9599)


## இராசிபலன்

**16.06.2005**
**(ஆனி 02, வியாழக்கிழமை)**
**நவமி பிற்பகல் 4.49 மணிவரை**
**அத்தம் பின்னிரவு 12.13 மணிவரை**
**இராகுகாலம் 1.23 - 2.53 மணிவரை**
**சுபநேரம் 7.23 - 8.53 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | நல்ல வருமானம், திடீர்ப்பயணம், காரிய சித்தி, நண்பர்கள் உதவி. |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, பண விரயம், ரோக நிலை. |
| மிதுனம் | அற்பர் உறவு, பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம். |
| கடகம் | கூட்டு முயற்சி, இனிய அனுபவம், வாக்கு மேன்மை, அன்னியர் சந்திப்பு. |
| சிங்கம் | மாதர் நட்பு, அதிக செலவு, தொழில் சுமை, முயற்சி தாமதம். |
| கன்னி | ஜனவசியம், ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, போசன சுகம். |
| துலாம் | தொழில் பிரயாசை, சயனசுகக் குறைவு, காரிய தாமதம், பணவிரயம். |
| விருச்சிகம் | புகழ், தொழில் வருமானம், சுபநிகழ்வு, எடுத்த கருமங்கள் கைகூடும். |
| தனுசு | கடின முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, தூர தேசச் செய்தி, அதிகாரம். |
| மகரம் | ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, ஆரோக்கியக் குறைவு, அச்சமான நிலை. |
| கும்பம் | திருடர் பயம், கடன் தொல்லை, காரிய தாமதம், வேலைச்சுமை. |
| மீனம் | அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை, களஸ்திர நன்மை, திடீர்ப்பயணம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

## அரசியல் பழிவாங்கல் அறிக்கை அமரசிறி தொடங்கொடவிடம்

(கொழும்பு)

2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம் 2004 ஆம் ஆணடு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அரசி யல் பழிவாங்கல்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக் கப்பட்ட குழு அதன் அறிக்கையை அமைச்சர் அமரசிறி தொடங்கொடவிடம் நேற்று முன்தினம் காலை கையளித்துள்ளது.

அரசாங்க நிர்வாக சேவையில் இடம்பெற்ற 1281 அரசியல் பழிவாங்கல்கள் பற்றிய முறைப்பாடுகள் இந்தக் குழுவினால் விசாரிக்கப்பட்டுள்ளன.

குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இந்த அறிக்கையை ஆராய்ந்த பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு துரிதமாக நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமைச்சர் கூறியுள்ளார். (அ-2,4)

## மேல் கொத்மலைத் திட்டத்தை கைவிடக்கோரி சுவரொட்டிகள்

(கொழும்பு)

மேல் கொத்மலைத் திட்டத்தினை உடனடியாகக் கைவிடக் கோரியும் பெருந்தோட்ட இளைஞர், யுவதிகளுக்கு அரசதுறையில் உடனடியாக நியமனம் வழங்கக் கோரியும் மலையக நகரங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன், மஸ்கெலியா, தலவாக்கல, பொகவந்தலாவ, ராகல, கொட்டஹல, நோரல ஆகிய நகரங்களின் முக்கிய இடங்களில் மலையக இளைஞர் மன்றத்தினால் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

## நாடெங்கிலும் ஆயிரத்து முந்நூறு கிராமசேவை அலுவலர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

இலங்கையில் சிவில் நிர்வாகக் கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

சரியான முறையின் கீழ் சிவில் நிர்வாகக் கட்டமைப்பை அமைக்க நடவடிக்கை எடுக்காமையே இதற்கான காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக கிராமசேவை உத்தியோகத்தர்களை நியமிப்பதில் இந்தக் குறைபாடுகள் பொதும் காணப்படுவ தாக அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் பழிவாங்கல் குறித்து தயாரிக்கப்பட்ட அறிக்கையை முன்வைப்பதற்காக கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடெங்கும் ஆயிரத்து 300 கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## அரச வைத்தியசாலை ஆய்வுகூட தொ.நு. நிபுணர்கள் சட்டப்படிவேலை

(கொழும்பு)

பல கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்க வைத்திய ஆய்வு கூட தொழில்நுட்ப நிபுணர்கள் ஆரம்பித்துள்ள சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கை தொடர்ந்தும் இடம் பெறுகின்றது.

இந்தச் சட்டப்படி வேலை செய்யும் தொழிற சங்க நடவடிக்கை கடந்த 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இந்தத் தொழிற் சங்க நடவடிக்கை அடிப்படையில் அரசாங்க வைத்திய ஆய்வு கூட கலைஞர்கள் குறித்த கடமை நேரத்தைத் தவிர மேலதிக சேவையில் ஈடுபடுவதை நிராகரித்துள்ளனர்.

நாடு முழுவதும் அரசாங்க வைத்தியசாலைகளில்பணிபுரியும் ஆய்வு கூட தொழில்நுட்ப நிபுணர்கள் சுமார் ஆயிரதது 70 பேர் இந்தத் தொழிற சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக சுகாதார சேவை தொழிற் சங்கக் கட்டமைப்பின் செயலாளர் ரவிக் குமுதேஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரச மருந்தாளர்கள சங்கம் ஆரம்பித்த வேலைநிறுத்தப போராட்டத்தைத் தற்காலிகமாக கைவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரச மருந்தாளர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சுகாதார அமைச்சர் பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தவுள்ளார்.

இதனடிப்படையில் குறித்த பேச்சுவார்த்தையின் பின்னர் சகல செயறபாடுகள் குறித்து முடிவு ஒன்று எடுககப்படும் என்று மருந்தாளர் சங்கத் தலைமைச்சங்க செயலாளர் சாரிந்திர குருபு தெரிவித்துள்ளார்.(அ-9)

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு)

தனியார் பஸ் சாரதிகளினதும் நடத்துநர்களினதும் நடவடிக்கைகளினால் பொதுமக்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்குவதாக முறைபாடுகள கிடைத்துள்ளதையடுத்து,

தனியார் பஸ் சாரதிகளையும் உதவியாளர்களையும் ஒழுக்கத்துடன் நடந்து கொள்வதற்கான செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.

பஸ் சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோர்களை ஒழுங்குமுறையாகச் சேவையில் ஈடுபடச்செய்யும் திட்டமொன்றை ஏற்படுத்தவுள்ளதாக மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அமல் குமாரகே தெரிவித்துள்ளார்.

பஸ் வண்டிகளை உரிய தரத்தில் பேணுவதை ஊக்குவிக்கும் வகையிலேயே 2001, 2002 ஆம ஆண்டுகளில் பஸ் கட்டணம் அதிகரிககப்பட்டதாகக் குறிப்பிட்ட அவர், சில பஸகள் உரியதரத்தில் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் நடவடிக்கையினால் பொது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதைத் தான் அறிந்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-9)


**மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்**

* மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
* சித்திரப் போட்டி
* புகைப்படப் போட்டி
* சிறுகதைப் போட்டி

**பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள் விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.**

# பொதுக்கட்டமைப்பை விளக்க பரப்புரை! கண்டியில் இன்று மாபெரும் பேரணி

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண பொதுக்கட்டமைப்பு குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிப்பதற்கான மாபெரும் பேரணியொன்று இன்று கண்டியில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதியின் தலைமையிலேயே இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.

பொதுக்கட்டமைப்பு தொடர்பாக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது மக்களுக்கு விரிவான விளக்கத்தை யளிக்கும் வகையிலான செயற்பாடுகளை அடுத்த சில நாட்களுக்குள் மேற்கொள்வது என்று ஜனாதிபதிக்கும் பிரதியமைச்சர்களுக்கும் இடையே கடந்த சனிக்கிழமை யன்று ஜனாதிபதி மாளிகையில் நடந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அதுதவிர, பொதுக்கட்டமைப்பு குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப துண்டுப்பிரசுர விநியோகம் இவ்வார இறுதியில் கொழும்பு கோட்டையில் ஆரம்பிககப்படும். பின்னர் அது நாடு முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ளது.

அரசாங்கத்தை விட்டு ஜே.வி.பி வெளியேறினாலும் அரசாங்கத்தை தொடர்ந்து நடத்த தன்னிடம் மாற்று வழிகள் இருப்பதாகவும் எக்காரணம் கொண்டும் மீண்டும் ஒரு தேர்தலுக்குச் செல்லும் எண்ணம் இல்லை என்றும் சனிக்கிழமை பிரதியமைச்சர்களைச் சந்தித்த ஜனாதிபதி தெரிவித்துளளார்.

ஜே.வி.பியின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப தன்னால் செயற்பட முடியாதென்றும் பொதுக்கட்டமைப்பு குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வுகளுக்கு பிரதமரும் இணைத்துக் கொள்ளப்படுவார் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

பொதுக்கட்டமைப்பு குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வுகளில் கூட்டங்கள் நடத்தல், துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் ஆகியவற்றுடன் அரச ஊடகங்களினூடாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சுவரொட்டிகளை ஒட்டவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ந-4)

# வருடாந்த மஹோற்சவம்

(இணுவில்)

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு வேல் திருவிழர்வும், 23ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 4 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8.00மணிக்கு சப்பறத்திருவிழாவும், 5 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை காலை தேர்த் திருவிழாவும், 6ஆம் திகது புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 7ஆம் தகதி தருக் கல்யாணமும் இடம்பெறவுள்ளது. (122)

# பாடசாலைகளில் கிணறு, மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை

## யுனிசெப்பிடம் உதவி கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் கிணறுகள் மற்றும் மலசலகூடங்கள் போன்றன தேவைப்படும் பாடசாலைகளுக்கு அவற்றை அமைத்துக்கொடுப்பதற்கு யுனிசெப் நிறுவனத்திடம் உதவி கோரப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் யாழ்.மாவட்டத்தின் கல்வி நிலை தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டததில் கலந்துகொண்ட வலயக் கல்விப்பணிப்பாளர்கள் தத்தமது வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் குறைபாடுகள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தபோது மலசலகூடங்கள் மற்றும் கிணறுகள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, இத் தேவையை முன்னுரிமைப்படுத்தி சுனாமியால் பாதிக் கபபட்ட பாடசாலைகள் மற்றும் மலசலகூடங்கள், கிணறுகள் குறைபாடாக உள்ள் பாடசாலைகளில் இவற்றை அமைத்துக் கொடுப்பதற்கு யுனிசெப் நிறுவனத்திடம் உதவி கோரப்பட்டுள்ளது. (ந-19)

# காணாமற் போனோருக்கு மரண அத்தாட்சிப் பத்திரம் வழங்கல் புதிய சட்டம்

(கொழும்பு)

கடந்த 20 ஆண்டு காலங்களுக்குள் காணாமல் போனவர்களாகக் கூறப்படுபவர்களுக்கு மரண அத்தாட்சிப் பத்திரங்களை விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தீவிரவாதம் மற்றும் அரச விரோதம், இன வன்முறைகள் என்பன காரணமாக காணாமல் போனவர்களுக்கு இந்த மரண அத்தாட்சிப் பத்திரம் விநியோகிக்கப்படவுள்ளது.

1971ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில் காணாமல்போன ஆயிரக்கணக்கானவர்களின் மரண அததாட்சிப் பத்திரங்களை பெறறுக்கொள்ள முடியாமல் அவர்களின் குடும்பங்களைச் சார்ந்தோர் பல சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாக தக்வல்கள் கிடைத்ததை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென்று அத்தாட்சிப் பத்திரங்களை வழங்குவதற்கான உப ஒழுங்கு முறைச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இதன்படி காணாமல் போனோருக்கு மரண அத்தாட்சிப்பத்திரங்களை விநியோகிப்பது தொடர்பான சட்டம் மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்குமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இயற்கை அனர்த்தங்கள், விபத்துக்களால் காணாமல்போயுள்ளவர்களுக்கும் மரண அத்தாட்சிப் பத்திரங்களை விநியோகிக்க இந்தப் புதிய சட்டங்கள் வழிவகுத்துள்ளதாகவும் பொது நிர்வாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(அ-9)

# பேருந்து கட்டண உயர்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் அவர்களது பணிப்பின் பிரகாரம் இம்மாதம் 11ஆம் திகதியிலிருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சாலைகளினால் செயலாற்றப்படும் சகல பாதைகளினதும் பேருந்துக் கட்டணம் 2005.06.11ஆம் திகதி அதிகாலையிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டண விபரங்கள் வருமாறு:

| தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் | தற்போதைய கட்டணம் | புதிய கட்டணம் |
|---|---|---|---|
| 04.00 - | 04.00 | 20.00 - | 23.00 |
| 05.00 - | 06.00 | 21.00 - | 24.00 |
| 07.00 - | 08.00 | 22.00 - | 25.00 |
| 09.00 - | 10.00 | 22.50 - | 26.00 |
| 10.00 - | 11.00 | 24.00 - | 28.00 |
| 11.00 - | 13.00 | 24.50 - | 29.00 |
| 13.00 - | 15.00 | 25.00 - | 30.00 |
| 14.00 - | 16.00 | 28.00 - | 32.00 |
| 15.00 - | 18.00 | 30.00 - | 34.00 |
| 16.50 - | 19.50 | 32.00 - | 36.00 |
| 18.00 - | 21.00 | | |

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்கு புதிய சபை தெரிவு

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பான அங்குரார்ப்பணக் கூடடம் கடந்த ஞாயிற்றுக் கிழமை யாழ்.மாகாண பிரதிப்பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ், வடகிழக்கு மாகாண சுகாதார திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.இரவேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ அபிவிருத்தி சங்கத்திற்கு போஷகர்களாக யாழ்.மாவட்ட அரச அதிபர் கேகணேஷ், பிரதி சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வடமராட்சி வடக்கு பிரதேச செயலர், மருதங் கேணி பிரதேச செயலர் மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன் தலைவராக வைத்திய அதிகாரி சி.கதிரவேலுப்பிள்ளையும், உப தலைவராக எஸ்.தணிகாசலமும், செயலாளராக ஆர்.வி.தங்கவேலுவும், உப செயலாளராக எஸ்.சுந்தரலிங்கமும், பொருளாளராக வி.செல்வராசாவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

சி.மகாலிங்கம், அ.ஞானச்சந்திரன், ச.சற்குணானந்தம், எஸ்.கதிர்காமத்தம்பி, செ.முத்துராசா, சி.தங்கராசா, வெ.பூபால சிங்கம், சி.விவநாதன், சி.பசுபதி, ச.குமார் ஆகியோர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (அ-35-104)

# விசேட தியான வகுப்பு

சின்மயா மிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த சுவாமி ரமண சைதன்யா எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக உள்ள நாவலர் மணிமண்டபத்தில் இலவச தியான வகுப்புகளை நடாத்தவுள்ளார்.

மன ஒருமைப்பாட்டிற்கும், மன இறுக்கங்களில் இருந்து விடுபடுவதற்கும் தியான பயிற்சி அவசியமாகும்.

தியான வகுப்பில் பங்குபற்ற விரும்புவோர் மணிமண்டபத்தில் பணியாற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஊழியரிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலக உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கம் அறிவித்துள்ளார். (ந-19)

# மஹோற்சவம்

(பொன்னாலை)

கரவெட்டி - தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

உற்சவ காலத்தில் தினமும் பிரமச்சாரிய ரமண சைத்தன்யர் ஆச்சாரியார் சொற்பொழிவாற்றவுள்ளார்.

(அ-49)

# வீதி சேதம்

(மருதங்கேணி)

பருத்தித்துறை சிவன்கோவில் சந்தியிலிருந்து தும்பளை செல்லும் வீதி மிக மோசமாகச் சேதமடைந்துள்ளதால் அவ் வீதியால் பயணிப்போர் மிக அசெளகரியங்களை, எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேநேரம் அவ்வீதியிலேயே பருத்தித்துறை நகரசபை அலுவலகம் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ் வீதியை உடன் திருத்தித்தருமாறு வீதியைப் பயன்படுத்துவோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ந-35)

# விண்ணப்பம் கோரல்

(பொன்னாலை)

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முதலாம் அரையாண்டுப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் இம்மாதம் 20 ஆம் திகதி வரை பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக்கொளளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ந-49)

# இளைஞர் குழுவின் அட்டகாசம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்கு கேணியடியில் உள்ள வீடு ஒன்றினுள் அத்துமீறி நுழைந்த இளைஞர் குழு ஒன்று வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோ, வீட்டுக் கண்ணாடிகள், கதிரைகள், மின்குமிழ்கள் முதலியவற்றை அடித்து நொருக்கி சேதப்படுத்தி உள்ளனர்.

ஆட்டோ உரிமையாளர் ச.சிவகுமார் என்பவர் தனது ஆட்டோவை தமது வீட்டிறகு சமீபமாகச் செலுத்திக்கொண்டிருககும் வேளை மூன்று இளைஞர்கள் மது போதையில் தமது சைக்கிள்களை வீதிக்கு குறுக்கே போட்டு ஆட்டோவை ஓடவிடாது தடுத்ததாகவும் சாரதி சாதுரியமாக ஆட்டோவை தமது வட்டிற்குக் கொண்டுசென்றதாகவும் சில மணிநேரத்தின் பின் இளைஞர் குழுவொன்று வீட்டிற்கு வந்து அடாவடித்தனம் புரிந்ததாகவும் கூறப்படுகின்றது.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் நடைபெற்றது.

வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இளைஞர்கள் குழு ஆட்டோவை உடைத்து சேதப்படுத்தி அட்டகாசம் செய்ததுடன் வீட்டில் படுத்திருந்த சண்முகசுந்தரம் (வயது 65), சிவகுமார் (வயது 35) என்பவர்களைக் கொட்டன்களால் தாக்கி படுகாயப்படுத்தியும் உள்ளனர். இவர்கள் இருவரும் யாழ் அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப பட்டுள்ளனர் என்பது தெரியவருகினறது.

(து-130)

# முச்சக்கரவண்டி கையளிப்பு

(பொன்னாலை)

அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு புதிதாக முச்சக்கரவண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. யாழ்-பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் இந்த முச்சக்கரவண்டியை வழங்கியுள்ளது.

பணிப்பாளர் அலுவலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவலிங்கம் அண்மையில் அனலைதீவு அரசினர் வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பு அதிகாரியிடம் முச்சக்கரவண்டியைக் கையளித்தார். (ந-49)

## இன்று ஒரு தகவல்

# யானையும் பானையும்

ஒரு அமைச்சர் அரண்மனைக்கு தாமதமாக வந்திருக்கிறார். "ஏன் தாமதம்"? என்று கேட்டிருக்கிறார் ராஜா. "அரசே நான் சீக்கிரம் புறப்பட்டுவிட்டேன்.

அந்த நேரம் பார்த்து எனது மகன் அடம்பிடித்து விட்டான் நானும் கூட வருவேன் என்று. அவனை ஒரு வழியாகச் சமாதானம் செய்து சரியாக்கிவிட்டு வருவதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது... அதுதான் கொஞ்சம் காலதாமதமாகி விட்டது." என்றார் அவர்.

அரசர் சிரித்தார். "என்ன அமைச்சரே! அரண்மனையில் எத்தனையோ கடுமையான பிரச்சினைகளுக்கெல்லாம் மிகவும் சாமர்த்தியமாக பதில் சொல்லிச் சமாளிக்கும் உங்களுக்கா ஒரு குழந்தையை சமாதானப்படுத்துவது பெரிய விஷயமாகிவிட்டது? என்றார். "மன்னா... ஒரு பெரிய யானையை அடக்குவதைவிட ஒரு பெரிய சேனையை போரில் ஜெயிப்பதை விட ஒரு குழந்தையை சமாதானப்படுத்துவது கஷ்டமான செயல் என்றார் இவர். "அப்படியா சொல்கிறீர்கள்?" என்று சந்தேகமாகக் கேட்டார் ராஜா. வேண்டுமானால் நான் அதை நிரூபித்துக் காட்டுகிறேன். அதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார். என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார் ராஜா. கொஞ்சநேரம் நீங்கள் எனக்கு அப்பாவாக நடிக்கவேண்டும். நான் உங்கள் குழந்தையாக நடிக்கிறேன். நான் அடம்பிடிப்பேன். நீங்கள் என்னை சமாதானப்படுத்த வேண்டும்" என்றார் அமைச்சர்.'சரி' என்று ஒத்துக்கொண்டார் ராஜா.

இப்போது ராஜாதான் அப்பா! அமைச்சர்தான் குழந்தை. அமைச்சர் தரையில் உட்கார்ந்தார். கையைக்காலை உதைத்துக் கொண்டு கத்த ஆரம்பித்துவிட்டர். அதாவது குழந்தை அடம்பிடிக்க ஆரம்பித்தது. அப்பா...அதுதான் ராஜா...அருகில் வந்தார்.ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன வேணடும் என்றார். "எனக்கு ஒரு யானை வேண்டும்!" என்று அழுதது அந்தக் குழந்தை! இதுதானா பிரமாதம்... என்று ஒரு பொம்மை யானையைக் கொண்டுவந்து கொடுக்கச் சொன்னார். கொடுத்தனர்.

குழந்தை மறுபடியும் கத்துகிறது. "எனக்கு இது வேண்டாம் உண்மையான யானை வேண்டும்" என்றது. ராஜா நினைத்தால் முடியாததா? உடனே ஒரு பெரிய யானையைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். "அப்பா... எனக்கு இப்போது ஒரு பானை வேண்டும்" என்றது குழந்தை. ராஜா பார்த்தார். ஒரு பானை கொண்டு வரச்சொல்லிக் கொடுத்தார்.

குழந்தை மறுபடியும் உதைக்க ஆரம்பித்தது. "நீ கேட்டதைக் கொடுத்துவிட்டேன். மறுபடியும் ஏன் கத்துகிறாய்?" என்றார். "இந்தப் பானைக்குள் அந்த யானை போகவேண்டும்" என்று கத்தியது குழந்தை. ராஜா பார்த்தார். "சரி... இந்தப் பானையில் அந்த யானை போக வேண்டும்! அவ்வளவு தானே" என்றார். அந்தப் பானையை தரையில் வைத்தார். அதில் அந்த யானையைப் போகச் சொன்னார். யானை அதில் காலை வைத்தது. பானை உடைந்துவிட்டது.

குழந்தை மறுபடியும் கத்த ஆரம்பித்தது. "எனக்குப் பானை வேண்டும்..." எனக்கு இன்னுமொரு பானை வேண்டும்" என்றது. "சரி.. இன்னொரு பானை கொண்டுவந்து கொடுங்கள்" என்றார். கொண்டுவந்து கொடுத்தார்கள்.

"எனக்கு இந்தப் பானை வேண்டாம். அந்தப் பானைதான் வேண்டும்" என்று கத்தியது குழந்தை. "அதுதான் உடைநது விட்டதே" என்றார். "உடைந்தால் என்ன அதை மீண்டும் ஒன்றாக்கி பானை செய்து தா"என்றது குழந்தை.

ராஜா பார்த்தார். இதற்கு மேல் நம்மால் தாக்குப் பிடிக்க முடியாது என்ற முடிவுக்கு வந்துவிட்டார். "போதும் அமைச்சரே! புரிந்துகொண்டேன். குழந்தையைச் சமாளிப்பது கஷ்டம்தான். எழுந்திருங்கள்" என்றார்.

அமைச்சர் அதன்பின் தான் கையைக்காலை உதறிக் கொண்டு எழுந்தார். குழந்தைகளின் பிடிவாதம் ஒரு தனி ரகம் தான்.

பளளிக்கூடத்தில் ஒரு பையன் தரையில் கிடந்து வாள் வாளென்று கத்திக்கொண்டு இருந்தான். அந்த நேரம் பாாத்து அவனது அப்பா அவனை அழைத்துச் செல்ல வந்தார். "ஏன் பையன் கத்துகிறான்?"என்று கேட்டார். "மாணவர்களுக்கிடையே சண்டை அதில் ஒரு பக்கத்துக் காதைக கடித்துவிட்டான் அதுதான் கத்துகிறான்" என்றார் ஆசிரியர். "ஐயையோ... அப்படியென்றால் என்மகனை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்ல வேண்டுமே" என்று பதறினார் அந்த அப்பா.

பதறாதீர்கள் சார்! கடிபட்டவன் ஆஸ்பத்திரிக்குச் சென்றுவிட்டான். இவன் கடித்தவன்... கத்துகிறான்" என்றார் ஆசிரியர். "ஏன்?" என்று கேட்டார் அப்பா.

"இன்னொரு பக்கக் காதும் வேண்டும் கடிக்கவென்று கேட்டு அடம்பிடிக்கிறான்" என்றார் ஆசிரியர் தனது காதைத தடவிக் கொண்டு.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் இனவாதப் பிக்குகளுக்குக் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின் ஓரளவாவது தமிழ் மக்களை போர்ச்சூழல் அற்று நிம்மதியாக வாழ முயன்று கொண்டிருக்கும் வேளையில் பேரினவாதிகள் அதனைக் குலைத்து போரை ஏற்படுத்த முயற்சிப்பது கண்டிகக்கத்தக்க விடயமாகும் எனக் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுனாமியின் பின் பாரிய அழிவுகளை சந்தித்த கரையோரப் பகுதியில் மீள் கட்டுமான பணியினை ஏறபடுத்த பொதுக்கட்டமைப்பு ஒன்று அவசியமான இக் காலகட்டத்தில் இனவாதப் பௌத்த பிக்குகளும் ஜே.வி.பி.யினரும் பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதை உயர்கல்விச் சமூகம் என்ற வகையில் முற்றிலும் கண்டிப்பதாகவும்,

தமிழ் பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களோடு எந்தவித தொடர்பும் இல்லாது தன்னிச்சையாக முடிவுகளை எடுக்கும் அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், தமிழ் பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த வகையிலேயே செயற்படுகின்றது என்பதை இந்நாட்டின் தலைவர்கள், முக்கியஸ்தர்கள், பொது மக்கள் போன்றோர் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

# அரசு தொடர்ந்தும் ஏமாற்றினால் பாரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## எச்சரிக்கிறார் அத்துரலிய ரத்னதேரர்

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசாங்கம் தொடர்ந்தும் நாட்டையும் நாட்டு மக்களையும் ஏமாற்றுமாகவிருந்தால் மக்களினதும், நாட்டினதும் நலன்கருதி பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்குமென ஜாதிகஹெல உறுமயக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் அத்துரலிய ரத்தினதேரர் எச்சரிக்கும் தொனியில் கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அத்துரலிய ரத்தின தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகாநாயக்கரிடம் பொதுக்கட்டமைப்பு உட்பட பலவிடயங்களில் உறுதிமொழிகளை வழங்கியுள்ளார். இந்த நிலையில், அந்த உறுதிமொழிகளை மீறி ஜனாதிபதி செயற்படுவாரானால் அதற்கு எதிராக தீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-8)

# சாவகச்சேரி, முல்லைத்தீவு நகரங்களை அபிவிருத்திசெய்ய அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

மக்கள் தொகைக்கு ஏற்ப பொதுவசதிகளுடன் கூடிய நகரங்களாக சாவகச்சேரி மற்றும் முல்லைத்தீவு ஆகிய நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நகர அபிவிருத்தி வேலைகளை விரைவில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கென நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர நிர்மாண நிபுணர்களைக் கொண்ட இரு விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுக்கள் சாவகச்சேரி மற்றும் முல்லைத்தீவு ஆகிய நகரங்களுக்குச் சென்று குறித்த நகர நிர்மாணத்திட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (து-9)

# பாடசாலை அனுமதிக்கு போலி ஆவணங்கள் சமர்ப்பித்த அரச ஊழியர் மீது விசாரணை

தேசிய பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதி பெறுவதற்குத் தேவைப்படும் போலி ஆவணங்களைத் தயாரித்துவந்த சந்தேக நபர் ஒருவர் பிலியந்தலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சுற்றிவளைப் பின்போது கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவின் தலைமை அதிகாரி ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்றவர் என்பது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இவரிடமிருந்து பிள்ளைகளைப் பாடசாலைக்குச் சேர்ப்பதற்கான 300 போலி ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

4 தேசிய பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பதற்காக போலி ஆவணங்களை சமர்ப்பித்த அரச உத்தியோகத்தர்கள் தொடர்பான விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி விசாரணைக் குழுவின் விசாரணைகளில் வெளியான தகவல்களின் அடிப்படையில் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு இந்த விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. கொழும்பில் உள்ள விசாகா பெண்கள் கல்லூரி, டிஎஸ்சேனநாயக்க வித்தியாலயம், நாத்தாண்டிய தம்மிஸசரப் பாடசாலை முதலியவற்றில் அனுமதி பெறுவதற்காகச் சில அரச உததியோகத்தர்கள் போலி ஆவணங்களை சமர்பபித்துள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறான உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் முடிவடைந்த பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் எனப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (து-2)

# 80 ஆயிரம் தொழிலாளர்களுக்கு மலேசியாவில் வேலைவாய்ப்பு

(கொழும்பு)

இந்த வருடத்திற்குள் சுமார் 80 ஆயிரம் இலங்கையர்களுக்கு மலேசியாவில் தொழில்வாய்ப்புக்களை வழங்க மலேசியத் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொழில் அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நிர்மாணத்துறை, கைத்தொழில்துறை உட்பட பல்வேறு துறைகளில் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுககக்கூடியதாக இருக்குமென தொழில் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச தொழில் அமைச்சர்கள் சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொணட பின்னர் நாடு திரும்பிய தொழில் அமைச்சர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஊடகம் ஒன்றிற்கு அளித்த செவ்வி ஒன்றின்போதே இதனைத் தெரிவித்தார்.

மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கு மேலாகக் கனடாவிலும் இலங்கையர்களுக்குத் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க பல்வேறு கட்டங்களில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுவருவதாக மேலும் தெரிவித்தார். (து-9)

# புத்தர்சிலை வழக்கு ஓகஸ்ட்டிற்கு ஒத்திவைப்பு

திருகோணமலை புத்தர்சிலை தொடர்பாக சட்டமா அதிபரினால் திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழங்கு ஓகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்த நீதிபதி தியாகேந்திரன் அன்றைய தினம் முச்சக்கர வண்டி சாரதிச் சங்கத்தின் செயலாளரை ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் இவ் வழக்கு விசாரணைக்கு வந்தபோது திருகோணமலை நகரசபையின் செயலாளர் எஸ்.விபுலானந்தன், உதவிப் பொலிஸ் அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோர் சமுகமளித்தனர். நீதிபதி விசாரணையை ஓகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, திருகோணமலையில் புத்தர் சிலை அகற்றாமையைக் கண்டித்து போராட்டம் எதனையும் மேற்கொள்ள வேண்டாமென திருகோணமலை மக்கள்பேரவை அறிவித்துள்ளது.(ச)

# தமிழகப் பயணம்

**பயணக் கட்டுரை**

17 காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திற்கு நான் சென்ற ராசி போலும், அன்றைய தினம் ஆதிகேசவன் என்ற பெரும்புள்ளி ஒருவர் மோசடியின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதனால் காவல்துறை ஆணையாளர் அலுவலகம் சுறுசுறுப்போடு இயங்கியது. பொலிஸார் அங்குமிங்கும் ஓடியபடியே இருந்தனர். ஊடகவியலாளர்களின் உற்சாகத்தை சொல்லவும், வேண்டுமா?

ஆணையர் இருக்கும் அறையின் நுழைவாயிலில் ஊடகவியலாளர்களின் கூட்டம், உலகத்தலைவர் ஒருவர் விமானத் தளத்தில் வந்திறங்கும் போது பத்திரிகையாளர்கள் புடைசூழும் காட்சி போல அது இருந்தது.

ஆணையர் அறையில் விசாரணை முடிந்த பின்னர் ஆதிகேசவனைப் பொலிஸார் வெளியே அழைத்துவந்தனர். ஊடகவியலாளர்களின் கமராக்களும், வீடியோக்களும் ஆதிகேசவன் மீது ஒளி பாய்ச்சின. ஆதிகேசவனின் கழுத்தில் தேர் வடம்போல் சங்கிலி. ஒவ்வொரு கைவிரல்களிலும் இரண்டுக்குக் குறையாத மோதிரங்கள்.

'நடமாடும் நகைக்கடை' என்ற பட்டம் அவனுக்கு வழங்கப்பட்டது.

அரசியல் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ள ஆதிகேசவன், வெளிநாட்டில் உள்ளவர்களிடம் இருந்து கோடிக்கணக்கான ரூபாய் கடன பெற்றுத் தருவதாகக் கூறி, அதற்கான தரகுக் கட்டணமாகப் பல இலட்சங்களை அபகரித்துள்ளான்.

கூடவே போலிக் காசோலை எழுதி வங்கி மோசடி. இப்படிப் பெரியதொரு குற்றப்பத்திரிகை அவன்மீது சுமத்தப்பட்டிருந்தது.

இவ்வளவு குற்றங்கள் சுமத்தப்பட்டிருந்தபோதிலும் ஆதிகேசவனிடம் எந்தக் கலக்கமும் இருக்கவில்லை. படப்பிடிப்பாளர்கள் அவனைச் சுற்றிச் சுற்றி வலம் வந்த போதெல்லாம், அவன் அதைப் பொருட்படுத்தவேயில்லை.

குறைந்தது தன்னை ஒரு மந்திரியாகக் கற்பனை செய்தால் மட்டுமே அவனால் அப்படி இருந்திருக்க முடியும் என்பது எனது ஊகம்.

தமிழகததுப் பத்திரிகையாளர்களுக்கு காவல் துறையினர் வழங்குகின்ற கௌரவம், வசதிகள் யாழ்ப்பாணத்தில் நடக்குமா? இந்தக் கேள்விகள் என்னுள் ஓடிக்கொண்டிருந்தன.

செய்தியாளர்கள் இருப்பதற்கே கதிரைபோடாத யாழ்ப்பாணத்து அரச அலுவலகங்கள்- அதிகாரிகள் தொலை பேசி வசதியா தரப்போகிறார்கள். என் கேள்விக்கான பதிலை நானே சொல்ல வேண்டியதாயிற்று. அங்கும் பத்திரிகையாளர்கள், இங்கும் பத்திரிகையாளர்கள் ஏன் இந்த வேறுபாடு. இது ஆய்வுக்குரியதாயினும் அதற்கான காரணம் யாழப்பாணப் பத்திரிகையாளர்களே! என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

தால் அதை அக்குவேறு ஆணிவேறாகப் புட்டுக்காட்டுவதில் அவர்கள் பின்நிற்பதில்லை. இங்கு அப்படியில்லையே!

யாழ்ப்பாணத்து டொனேசன் கலாசாரத்தால் எத்தனையோ ஏழை மாணவர்கள் பாதிக்கப்பட்டிருந்த போதிலும் அதுபற்றி எந்தப் பத்திரிகையாவது செய்தி வெளியிட்டதா? அவ்வாறு செய்தி வெளியிட்டால் பாடசாலை அதிபரைப் பகைக்க வேண்டிவரும் என்ற பயம், தனகுத் தெரிந்தவர்களுக்கு அட்மிஷன் எடுத்துக் கொடுக்க முடியாது போகுமென்ற ஏக்கம் இந்தச் சுயநலக் கொடிகள் நம் பத்திரிகையாளர்களைச் சுற்

# துணிந்து எழுதும் தமிழகப் பத்திரிகையாளர்கள்

எதுவாயினும் மாடமாளிகை, இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு செய்வதற்குச் சேவகர்கள். இப்படி சுக போக வாழ்வு நடத்திய ஆதிகேசவன் இன்னும் சில நிமிடங்களில் சிறைக்குள் அடைக்கப்படுவான் என்ற உண்மைத் தகவலோடு, ஆணையர் அலுவலகத்திலிருந்து வெளியேறினேன். எழும்பூரில் உள்ள காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திலிருந்து தினமணிப்பத்திரிகைக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறிக் கொண்டேன்.

**துணிந்து எழுதுவார்கள்**

ஒரு நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் நான்கு தூணகளில் ஒன்று பத்திரிகை. இந்த உண்மை பத்திரிகையாளர் பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். இதை தமிழகத்துப் பத்திரிகையாளர்கள் நன்கு புரிந்துகொண்டுள்ளார்கள். விருப்பு வெறுப்பு இல்லாமல் நடுநிலையோடு செய்தி எழுதுவதிலேயே அவர்கள கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

அரச அதிகாரி ஒருவர் தவ்று செய்றியிருக்கும் வரை, யாழ்ப்பாணத்து அரச அதிகாரிகள் பத்திரிகையாளர் களுக்கு உரிய கௌரவம் வழங்கமாட்டார்கள்

**என். விஜயன்**

என்பதே உண்மை.

என் சிந்தனை ஓட்டத்தை முந்தியது போல நடத்துநர் வீசில் ஊதி எல்.ஐ.சி. இறங்கலாம் என்றார். அவரின் ஞாபகப் படுததலோடு பஸ்ஸால் இறங்கி தினமணி அலுவலகத்தை நோக்கி நடந்தேன்.

(வளரும்)

---

## தேசியப் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

இந்த வருட இறுதிக்குள் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 750ஆக அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கையை மேறகொண்டுள்ளது. இந்தப் பாடசாலைகள் அனைத்தும் சகல வசதிகளையும் கொண்டிருக்கும். நாட்டின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் இந்த அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் தரம் வாய்ந்த பாடசாலைகள் இல்லாத காரணத்தினால் தங்களது பிள்ளைகளை பாடசாலைகளுககு அனுமதிப்பதில் பெற்றோர் பெருமளவு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனால் இந்த அபிவிருத்தித் திட்டத்தை ஒரு அவசர நடவடிக்கையாக நடைமுறைப்படுத்தும படி ஜனாதிபதி பணிப்புரை விடுத்துளளார்.

அதே சமயத்தில் கிராமப்புறப் பாடசாலைகளில் ஏற்படும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரபபுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## அரசாங்கம் கவிழ்ந்துவிடாது என ஐ. தே. க. உறுப்பினர் நம்பிக்கை

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நிலைமை காரணமாக அரசாங்கம் பதவி இழக்கும் நிலை ஏற்படும் பட்சத்தில் அரசுடன் ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைவதற்கான அறிகுறிகள் தென்படுவதாகவும்,

இந்த நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் ஸ்திர தன்மையைப் பெறும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்விடயம் குறித்து ஜெயலத் ஜெயவர்த்தன கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பொதுக்கட்டமைப்பு தொடர்பான விபரங்கள் எதுவும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை என்றும் டோக்கியோ மற்றும் ஒஸ்லோ பரகடனத்துக்கு அமைய பொதுக்கட்டமைபபுத திட்டம் அமையும் பட்சத்தில் நிச்சயமாகத தமது கட்சி அதற்கு ஆதரவை வழங்கும் என்றும் கூறினார்.

ஜனாதிபதி தனது நடவடிக்கைகள் காரணமாக குழப்ப நிலையை நாட்டில் ஏற்படுத்தியுள்ளார் என்றும் தற்போதைய பிரச்சினைக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியுடன் நேர காலத்துடனேயே பேச்சுவார்த்தைகளை நடாத்தி இந்த நிலையைத் தடுத்திருக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

## ஜப்பான் உதவியுடன் நவீன இரத்த வங்கி

கொழும்பில் ஜப்பானின் உதவியுடன் இரதத வங்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இவ் வங்கி நாரன்பிட்டியப் பகுதியில சகல வசதிகளையும் கொண்டதாக இயங்கும். இதனைத் தவிர நாடு பூராகவும் பிரதான வைத்தியசாலைகளில் இயங்கும் பிராந்திய இரத்த வங்கிகளை முன்னேற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

புதிதாக அமுல்செய்யப்படவுள்ள இத்திட்டத்தில் நவீன தொழில்நுட்பங்களை உபயோகித்து இரத்தத்தைப் பேணிப் பாதுகாத்தல், இரத்த வங்கியின் செயற்பாடுகள் பற்றி ஊழியர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவை உள்ளடங்கும்.

நேறறுமுன்தினம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சுபாரதி நிகழ்ச்சியில் கலந்து கொணடு கருத்துத் தெரிவித்த அமைசசர் இரத்ததானம் செய்வோரது பெயர் விபரங்கள் அரச மருத்துவமனைகளில் பதிவு செய்யப்படுமெனவும் தனியார் வைத்திய சாலைகளில் இரத்த வங்கிகளை ஆரம்பிக்கும நோக்கம் கிடையாது என்றும் தெரிவித்தார். தனியார் பாடசாலைகள் மத்திய இரத்தவங்கியிடமிருந்தோ, பிராந்திய இரத்த வங்கியிடமிருந் தோ இரத்தத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் கூறினார். (து-2)

## பஸ் ஊழியர் வேலை நிறுத்தம்

103 ஆம் இலக்கத்தைக் கொண்ட நாராகன்பிட்டி- கோட்டை, 176 ஆம் இலக்க கரகம்பிட்டிய-ஹெட்டியாவத்தை, 173ஆம் இலக்க நுகேகொடை- கோட்டை ஆகிய மார்க்கங்களில போக்குவரத்தை மேற்கொள்ளும் பஸ் சேவைகளில் நேற்றுமுன்தினம் காலை தொடக்கம் வேலை நிறுத்தம் இடம்பெற்று வருகிறது.

தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தகவல் தருகையில், சிறிய குற்றச்செயல்களுக்காக பஸ் சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே இந்தவேலை நிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதாகத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கொழும்பு நகரப் போக்குவரத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வை.ஜி.எம்.லாகீருடன் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. (து-2)

## அதிர்ச்சியூட்டும் ஆய்வுத் தகவல்

(கொழும்பு)

மலையகத்திலேயே அதிகளவிலான சட்டவிரோத கருச்சிதைவு மையங்கள் ஹற்றன் பிரதேசத்தில் இயங்கிவருவதாக அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆய்வு ஒன்றின் மூலம் வெளியாகியுள்ள இத்தகவலை வெளியிட்ட அரச சார்பற்ற அமைப்பொன்று இதனமூலம் பெருந்தோட்டப் பகுதிகளில் சமூகச் சீர்கேடுகள் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பெண்கள் உரிமைகள் தொடர்பான சட்டமூலம் நிறைவேற்றப்படுமானால் அது சட்டவிரோத கருச்சிதைவை அங்கீ கரிக்கும் வகையில் அமைந்துவிடும் என குறித்த அரசசார்பற்ற அமைப்பு எச்சரித் துள்ளது. (து)

## நடத்தப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் நிரந்தர ஆசிரியர் நியமனங்கள்

(கொழும்பு)

அரசதுறைகளில் தற்போது இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளில் ஆயிரத்து 500 பட்டதாரிகளுக்கு வெட்டுப்புள்ளி அடிப்படையில் நிரந்தர ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

கடந்த மே மாதம் 21 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின்மூலம் இந்த ஆசிரியர்நியமனங் களை எதிர்வரும் யூலை மாதம் முதல் வாரத்தில் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு எடுத்து வருகிறது.

இதன்பிரகாரம் பரீட்சைப் பெறுபேறுகளும் மிக விரைவில் வெளியிடப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் தேசியபாடசாலைகளிலும் மாகாணப் பாடசாலைகளிலும் நிலவும் வெற்றிடங்களுக்கு ஏற்ப புதிய ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாசிரியர் நியமனங்கள் வழங்கப்படும் போது அதிகஷ்டப் பிரதேசம் மற்றும் கஷ்டபபிரதேசப் பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் நினைவுப் பேருரை



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு நிறைவை ஒட்டி பேராசான் மூதறிஞர் கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்) நினைவாக 30.05.2005ஆம் திகதி "இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச சேவை - ஒப்பீட்டு ஆய்வு, நோர்வே - எத்தியோப்பியா - இலங்கை" என்ற தலைப்பில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் மற்றும் உப பீடாதிபதி பாலசுப்பிரமணியம் தனபாலன் ஆகியோர் நிகழ்த்திய நினைவுப் பேருரையின் தொகுப்பு.-

# இடைநிலை பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை - ஒப்பீட்டு ஆய்வு நோர்வே - எத்தியோப்பியா - இலங்கை


**கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்**
(பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)
**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
(உப பீடாதிபதி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி)




இன்றைய நவீன காலத்தின் தரிசனம் மிக்க தமிழறிஞரும் தமிழ்ப் பற்றாளரும், இலக்கியவாதியும் மகத்தான எனது குருநாதருமாகிய பேராசான் மூதறிஞர் சொக்கன் அவர்களின் ஞாபகார்த்த நினைவுப் பேருரையை நிகழத்தக் கிடைத்த சந்தர்ப்பத்தையிட்டுப பெருமையடைகின்றேன். இங்கு நான் முனவைக்கும் ஆய்வியற் சிந்தனைகளை எனது பேராசான் சொக்கன் அவர்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

எந்த ஒரு இனத்தினதும், சமூகத்தினதும், எதிர்காலத்திற்கும், நல்வாழ்விற்கும், இருபபிற்கும் முழு நிறைவான கல்வி இன்றியமையாதது. மானுடவியல் அடிப்படையில் உலகளாவிய ரீதியில் இன்று முழு நிறைவான கல்வியின் சகல முகங்களையும் உள்ளடக்கி அபிவிருத்தி நோக்கிய நகர்வுகள் மிக விரைவாக மேற்கொள்ளப் படுகின்றன. உலக நாடுகள் அனைத்துமே நிலையான அபிவிருத்தியை நோக்கிக் கல்வியை முன்னெடுக்கின்றன. ஆனாலும் தற்போது இலங்கைத் தீவின் நிலைமையை ஆராய்கின்றபோது அது தோல்வியுற்ற - பனமுக நெருக்கடியில் சிக்கித்தவிப்பது புலனாகின்றது.

காலனித்துவத்திலிருந்து விடுபட்டு 56 வருட சுதந்திரத்திற்குப் பின்னர் தோல்வி உணர்வைக் கொண்டுள்ளோம். தோல்வியுறற அரசு, தோல்வியுற்ற மக்கள், தோல்வியுற்ற சமூகங்கள் என்ற உணர்வுகளே முனைப்பாகவுள்ளன. நிகழ்காலம் பற்றியும் எதிர் காலம் பற்றியும் உள்ள நம்பிக்கைதான் சமூகநிலை பற்றிய அளவுகோல் எனின் கடந்த காலத்தில் சிற்சில வெற்றிகளையும் நோக்க வேண்டியுள்ளது. மனித அபிவிருத்திக் குறிகாட்டி, பால்நிலை சமத்துவக குறிகாட்டி, பெருந்தோட்டங்கள், ஆடைக் கைத்தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வீடமைப்புத் திட்டங்கள் என்பவை வெற்றிகளுக்கான உதாரணங்களாக உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை கடந்த மூன்று தசாப்தங்களுககு முறபட்டவை.

பின்வந்த இரு தசாப்தங்களும் தோல்விகளையே தளமாகக் கொண்டவையாகவுள்ளன. இவற்றில் உள்நாட்டு யுத்தம், இளைஞர் கிளர்ச்சிகள், இனவாத அடக்குமுறைகள், விழுமியங்களின் சீரழிவுகள், திறமையற்றவர்களினதும் சுயநலவாதிகளினதும் நிர்வாகம் சந்தர்ப்பவாத அரசியல, தடையற்ற நுகர்ச்சி, விளம்பரக் கலாசாரம, கலாசாரச் சீரழிவுகள், வரட்சி, இயற்கைச் சூழல் மாசடைதல், சுனாமித் தாக்கங்கள, ஏற்கமுடியாத அளவில் இளைஞர் வேலையின்மை, மாயமாகி நிற்கும் நிரந்தர சமாதானம், வன்முறைகள், போதைப்பொருட் பாவனை, சிறுவர் பாலியற் துன்புறுத்தலகள் இவைதான் இன்றைய இலங்கைத் தீவின் நிலைகள். இவை தோல்வியுற்ற மாறும் நிலையினூடு நெருக்கடியை எடுத்துக் காட்டுகின்றன.

மேலும் சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, விளக்கம், செயற்திறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை எமது கல்விமுறை வழங்கத் தவறிவிட்டது எனவும் விமர்சனங்கள் எழுந்துளளன. புத்தாக்கங்கள் (Innovative), புதிய சீராக்கங்கள் (Modifications), பல்லூடக வெளிப்படுத்தல்கள் (Multimedia Presentation), ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத் தன்மை, அன்புடைமை என்பவற்றுடன் கூடிய பண்பாட்டு விழுமியங்களைக் கொண்ட முழுமையான ஆளுமை விருத்தியை மாணவர்களுக்கு அளிக்கமுடியாத பாடசாலைச் சூழ்நிலைகள் நிலவுகின்றன. இவற்றிலிருந்து விடுதலை பெற,

1. கல்வியினூடும், ஆசிரியர்களினூடும் வழிகாட்டல் சேவையைப் பிரயோகித்தல்.

2.கல்விக்கான வாய்ப்புக்களை விரிவாக்குதல்.

3.கல்வியின் தரத்தை மேம்படுத்தி, பாரம்பரிய விழுமியங்களைக் கைக்கொள்ளும் செயற்றிடங்களை நடைமுறைப்படுத்தல்.

4.செயல்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்களை விருத்தி செய்தல்.

5.ஆசிரியர் அதிபர்களுக்கு வினைத்திறனான பயில்வுகளை வழங்குதல்.

6.சுயகற்றல் கற்கக் கற்றல் தேர்ச்சி (Learning to learn), சேர்ந்து வாழ்வதற்குக் கற்றுக் கொள்ளல் (Learning to live together),



ஆற்றுவதற்காக கற்றுக் கொள்ளல் (learning to do), அறிந்து கொள்வதற்காக்க் கற்றுக் கொள்ளல் (Learning to know), ஆவதற்காகக் கற்றுக் கொள்ளல் (Learning to be) என்ற திறன்களை மாணவர்களுக்கு வழங்குதல்

என்ற வகையில் சமூக வியாபகமான நோக்குகளின் தீய விளைவுகளில் இருந்து வளரும் பிள்ளைகளைப் பாதுகாத்தல், பெற்றோர் - பிள்ளைகள் - சமூகத்தவர்கள் ஆகியோருக்கு வழிகாட்டி ஆலோசனை வழங்கல் என்பனவும் புதிதாகச் சாதிக்க வேண்டியவையாகவுள்ளன. தற்போதைய எமது கல்வி முறையானது முறைசார் - முறைசாரா ரீதியில் பல்வேறு பரிமாணங்களில் கல்வியியல் நிபுணர்களினால் ஆய்வுகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. இவர்களின் கண்டுபிடிப்புக்கள் கல்விக் கொள்கை உருவாக்கங்களில் புகுத்தப்படுகின்றன.

இத்தோடு ஏனைய நாடுகளின் கல்வி முறைமைகள் ஆராயப்பட்டு அவற்றுள் நல்ல அம்சங்கள் எமது கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளில் சேர்க்கப்படுகின்றன.

இவ்வடிப்படையில் இன்று சர்வதேச ரீதியாகக் கல்வியியல் ஆய்வுச் செல்நெறிகளில் ஒப்பீட்டு ஆய்வே (Comperative Research) முதன்மையாகவுள்ள சூழலில் நோர்வே, இலங்கை, எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் இடைநிலைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை தொடர்பான எனது ஆய்வை இயம்ப முறபடுகின்றேன். இவ்வேளை நான் கல்வி ஆய்வுகள் நிமித்தம் நோர்வே, கனடா, யப்பான், பிரான்ஸ், இந்தியா, இங்கிலாந்து நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் நிறைந்த அனுபவங்களை எனக்குத் தந்தன. பல ஒப்பிட்டுக் கல்வியியல் ஆய்வு அடிப்படைத்திறன்களைப் பெற வாய்ப்பாக இருந்தமையையும் இவ்வேளை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன.

## வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் (Guidance Counselling)

உலகளாவிய ரீதியில் இன்று மிக வேகமான சமூக மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமுள்ளன. இம் மாற்றங்கள் குடும்பம், பாடசாலை ஆகிய முக்கிய சமூக அலகுகளைப் பல்வேறு தாக்கங்களுக்கு உட்படுத்துகின்றன. இத்தாக்கங்களின் விளைவாக, பிள்ளை - பெற்றோர் தொடர்பு குறைதல், ஆசிரியர் -மாணவர் உறவு சிதைதல், பிளவுபட்ட குடும்பங்கள், கலாசாரச் சீர்கேடுகள், விழுமியங்களின் சிதைவு, இடைவிலகல், மனித உரிமை மீறல்கள் போன்ற தீய தாக்கங்களுக்கு சமூகங்கள் ஆளாகி மோசமான நிலையில் காணப்படுகின்றன.

இந்நிலையிலிருந்து விடுபட உகந்த நெறிமுறையாக வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவை காணப்படுகின்றது. பண்டைய சமூகத்தில் நிலவிய பாரம்பரிய நம்பிக்கைகள், குடும்ப உறவுகள், மூத்தோர் வழிகாட்டல்கள், சமயப் பழக்கவழக்கங்கள் இயல்பாகவே வழிகாட்டல் ஆலோசனை வழங்கும் அம்சங்களாகச் செயற்பட்டன. இன்று இந்நிலை முற்றாக மாறறமடைந்துள்ளது. இம்மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து இயைபாக்கம் அடையவைக்கும் செயன்முறையாகவும் ஆலோசனை வழிகாட்டல் சேவை அமைகின்றது.

இங்கு வழிகாட்டல் என்பது சரியானதைத் தெரிவு செய்தல், பொருத்தப்பாடு காணல், பிரச்சினை தீர்த்தல் ஆகியவற்றில் ஒருவர் மற்றவருக்கு ஆற்றும் உதவியாகவே வழிகாட்டல் அமைகின்றது. அதாவது வாழ்க்கையின் சகல சந்தர்ப்பங்களிலும் எல்லாப் பருவங்களிலும் சூழலுடன் இயைபாக்கம் காணவும், சுயதிறன் விருத்தி செய்யவும், தீர்மானங்களை மேற்கொள்ளவும், உளவியல் அணுகுமுறை அடிப்படையில் வழங்கப்படும்.

உதவியாக்வும் வழி காட்டல் பரிணமிக்கின்றது. இபபரிணமிப்பின் ஒரு முக்கிய கூறாகவே ஆலோசனை வழங்கல் அமைந்துள்ளது. இது ஆலோசனை நாடி தனது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண ஆலோசகரை நேர்முகமாகச் சந்தித்துப் புரிந்துணர்வுடன் கலந்துரையாடி சுயவிளகக அடிப்படையில் தனது பிரச்சினைகளைத தானே தீர்ப்பதற்கான உதவி வழங்கும் அம்சமாக ஆலோசனை வழங்கல் சேவை உள்ளது.

இன்று உலகளாவிய ரீதியில் மனிதர்கள் அனைவருக்குமே இவ் ஆலோசனை வழிகாடல்சேவை மிக அவசியமாகவுள்ளது. இது உளவளத்துணைக்கான அடிப்படைகளையும் வழங்குகின்றது.

அடிப்படையான உளவளத்துணை இருவருக்கிடையில் ஏற்படும் நெருங்கிய உறவை வளர்க்க உதவுவதற்காகப் பயன்படுகின்றது. தொடர் உள ஆற்றல்கள், திறன்கள, உறவாடும் நிலைகள் இம்முறையின் மையஙகளாகவுள்ளன.

மேலும் அடக்கி ஒடுக்கப்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆறுதல் பெறுவதற்கு ஒரு பாதுகாப்பான சூழலையும் இது உருவாக்குகின்றது. இவ்வாறான செயற்பாட்டில் உளவியல் விழிப்புணர்வும், உள்ளார்ந்த ஆற்றலும், ஆளுமை வளர்ச்சியும ஏற்படுகின்றது. மனநலவியலில் (Mental Hygine) புத்தாக்கங்களையும் ஏற்படுத்துகின்றது. இவ்வகையில் பாடசாலைக் கலவியுடன் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவையும் மாணவர்களுக்கு மிகுந்த அவசியமாக இன்றைய நிலையில் உள்ளது.

## பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டுதலின் முக்கியத்துவம் (Importance of Guidance)

1.தறபோது கல்வியின் நோக்கம் விரிவடைந்துள்ளது. மாணவர்களது ஆளுமையைப் பல பரிமாணங்களில் விருத்திசெய்ய வேண்டியுள்ளமை.

2.விரைவாக மாறிவரும் சூழ்நிலையுடன் சிறந்த, உயர்நிலைப்பட்ட பொருத்தப் பாட்டினைப் பெறும் திறன்களை அபிவிருத்தி செய்ய.

3.ஒவ்வொரு தனிப்பட்ட மாணவர்களது தேவைகள், விருப்பங்கள், நாட்டங்கள் ஆகியவற்றுடன் கல்வியை இணைத்துச் செல்வதற்கு.

4.மாணவர்களது கல்வியை இடையூறு செய்யும் காரணிகளைக் கண்டுபிடித்து நீக்குவதற்கு.

5.கல்விக்கும், எதிர்காலத் தொழில் வழிகாட்டலுக்குமான ஆறறல்களைப் பெருக்குவதற்கு.

6.மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள், மனமுறிவுகள், தாழ்வு மனப்பான்மை, கவலைகள், இழப்புக்கள் போன்றவற்றிலிருந்து மீள்வதற்கும் சமூகத்தில், நாட்டில் எதிர்கால நற்பிரஜைகளாக மாணவர்களை உருவாக்கவும் வழிகாட்டுதல் மிக முக்கியமாகக் கொள்ளப்படுகின்றது.

மேற்கூறியவற்றிலிருந்து குறிப்பாக இடைநிலைப் பாடசாலை மாணவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு உலகளாவிய ரீதியில் அபிவிருத்தியடைந்த நோர்வே, இடைநிலை அபிவிருத்தியடைந்து வரும் இலங்கை, இதைவிட அபிவிருத்தியில் பின்னோக்கியிருக்கும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளை ஒப்பீட்டு ஆயவு (Comperative Research) அடிப்படையில் அணுகி நீண்ட பயன்பாடுள்ள நோக்கில் இவ் நினைவுப் பேருரையை ஒழுங்கமைத்துள்ளேன்.

(தொடரும்)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 23

'ஸ்ரீலங்காவின் தேசியத் தறகொலை' என்னும் நூலில் இக்கலவரம் பற்றிக் குறிப்பிடுகையில் ''இந்த 1977இன் இனவெறித் தாக்குதல் முந்திய தாக்குதல்களைவிடப் பிரமாண்டமானது. 77,000 கொழும்புத் தமிழரை அகதிகளாக்குமளவு நடந்த தாக்குதல் இது'' எனக் கூறப்பட்டுள்ளது. ''ஆட்சிப்பீடமேறிய ஜெயவர்த்தனா'' அமைதி வேண்டுமெனில் அமைதி. போர் வேண்டுமெனில் போர்' என்று போர் முழக்கம் செய்தார்'' என 'இலங்கையின் இனப் போராட்டம்' நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''வடமாகாணம் 77 ஆகஸ்டில் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டது. யாழ்.நகரத்தின் சில பகுதிகள் அரசின் அதிகார பீடங்களாலேயே எரிக்கப்பட்டது. பொலிஸ், இராணுவ பய முறுத்தல்கள் நடந்தன. மூவர் சுட்டுக்கொல்லப் பட்டனர். வங்கிக் கொள்ளையையும், கார்க் கடத்தல்களையும் வைத்துக்கொண்டு யாழ்.தமிழ் மக்கள் கட்டுமிஞ்சிப் போகிறார்கள் என்று கூறப்பட்டது. அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக முப்படையும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. ஆயுத மோட்டார்களை அடிக்கடி பாதையில் காணக்கூடியதாய் உள்ளது. வவுனியா நகரம் தீ வைக்கப் பட்டுள்ளது. அங்குள்ள சில கிராமங்கள் கொழுத்தப் பட்டன. அரசின் அதிகார பீடங்களின் உதவியுடனேயே இவைகள் செய்யப்பட்டன.''

என எடுத்துக் கூறுவது '77 ஆகஸ்டும் தமிழ் மக்களும்' என்னும் நூலாகும். இங்கே குறிப்பிடப்பட்ட 1977 கலவரம் பற்றிய செய்திகள் தெளிவாக்கும் விடயம் யாதெனில், இதுவரை நிகழ்ந்தவைகளை விட இதில் அரச பங்களிப்பு அதிகம் என்பதேயாகும்.

1981இல் நடைபெற்ற கலவரமும் ஒடுக்குமுறையும் நொந்த தமிழ் உள்ளங்களை மேலும் நோகவைத்த நிகழ்வாகும். 1981இல் மாவட்டசபைத் தேர்தல்கள் நடைபெற்ற தினத்தன்று அமைச்சர்கள் சிறில் மத்தியூ, காமினி திஸநாயக்க ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தில் இருந்தபோதே சரித்திர சாதனையாகப் பல வன்செயல்கள் நடைபெற்றன. ''தொன்மைமிக்க யாழ்ப்பாண நகரச்சந்தையும் இதனைச் சார்ந்த கட்டடங்களும் அழிக்கப்பட்டன என்பதுடன் கனடாநாட்டின் அன்பளிப்பாக யாழ்ப்பாணத்தில் கட்டப்பட்டிருந்த ஒரு நூலகத்தை இலங்கை இராணுவமே எரித்திருக்கிறது. 90,000 நூல்கள் தீக்கிரையாக்கப்பட்டன.' இவ்வாறு பல குற்றச்சாட்டுகள் எழுந்தமை புறக்கணிக்கப்படத்தக்கதன்று. மேலும் 1981இன வன்முறைச் செயல்களைப் பற்றிச் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பல அமைப்புகள் இணைந்து வெளியிட்ட நூலாகிய போரா? சமாதானமா? மே 31ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்டு ஒருவர் காயப்பட்டமை, இச்சம்பவங்களின் விளைவாக வடக்கிலுள்ள கடைகளும் உடமைகளும் நாசமாக்கப்பட்டமை, தமிழ்மக்கள் துன்புறுத்தப்பட்டமை, யூன் முதலாந்திகதி அருமையான பெறுமதிவாய்ந்த யாழ்.நூல்நிலையம் எரிக்கப்பட்டமை, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையலுவலகம், ஈழநாடு பத்திரிகை நிறுவனம், யாழ்.பாராளுமன்ற உறுப்பினரின் வீடு, சுன்னாகம் சந்தையுட்படத் தொடர்கடைகள் என்பன தீக்கிரையாக்கி அழித்தொழிக்கப்பட்டமை, சில படுகொலைகளும் இடம்பெற்றமை முதலியன பற்றி எடுத்துக்கூறியுள்ளதுடன், இவை அனைத்தும் பொலிஸாரின் அனுசரணையுடனேயே நடைபெற்றதென்றும், யூன் 4ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் ஊழல் மலிந்ததாகவே நடைபெற்றதென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனரென்றும் அது மேலும் கூறுகிறது. இந்நூலின் இத்தகைய இனவாத வன்செயல்கள் இதேயாண்டு மட்டக்களப்பு, அம்பாறை, நீர்கொழும்பு, கேகாலை, களனி, பண்டாரவளை, வவுனியா, எட்டியாந் தோட்டை, இரத்தினபுரி, பெல்மடுமல்ல, கஹவத்தை, பலாங்கொடை, கொழும்பு ஆகிய இடங்களிலும் பரவின. தீ வைத்தல், பயமுறுத்தல், சொத்துக்களையும் உடைமைகளையும் சேதமாக்கல், படுகொலைகள் போன்ற நாசகாரச் செயல்கள் நடைபெற்றன. தேயிலை-றப்பர்த் தோட்டங்களில் வேலைசெய்த நூற்றுக்கணக்கான தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தமது குடும்பங்களுடன் தோட்டங்களிலிருந்து வெளியேறி அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்' எனவும் கூறப்பட்டமை இனவன்முறையை எடுத்துக்காட்டப் போதுமானதாகும். 1981இல் இனவாத மோதல்கள் புதிய வடிவத்தினை எடுத்தன. அதுவரை ஸ்தாபன வடிவம் எடுக்காத அதி தீவிர இனவாதிகளின் தூண்டுதலாலான இனவாத வன்செயல்கள் ஆங்காங்கே இடம்பெற்றன. முன்னர் இடையிடையே இடம்பெற்ற இவையாவும் இப்போது அடுத்தடுத்துத் தோற்றியதுடன், இவற்றினால் ஏற்பட்ட பெருமிழப்புகளும் உயிரிழப்புகளும் பெருமளவில் அதிகரித்தவண்ணமிருந்தமையும் முக்கியமானதாகும்.

''சிங்களவர்-தமிழர் உறவுகளில், அல்லது தொடர்புகளில் 1983ஆம் வருடம் ஒரு மாபெரும் மைல் கல் ஆகும் என்பது நன்கு அறியப்பட்டவொரு மெய்மையாக உள்ளது. 1958ஆம் ஆண்டு தொடக்கி வைக்கப்பட்ட ஒரு போக்கினை, 1983ஆம் ஆண்டு ஓர் உச்சக் கட்டத்திற்கு எடுத்துச் சென்றது''

என்கிறார் கா.சிவத்தம்பி. இந்தக் கலவரமானது தமிழர்கள் நூற்றுக்கு மேற்பட்ட வருடங்கள் வாழ்ந்த கொழும்பிற்கூட அவர்களுக்குப் பாதுகாப்பில்லையென்பதையும் அவர்களுடைய பாரம்பரியத் தாயகமான வடக்கிலும் கிழக்கிலுமே பாதுகாப்பை நிலைநிறுத்தி வாழ முடியுமென்பதையும் உணர்த்தியதென்றும் மேலும் அவர் கூறுகின்றார். 1983இன் கொடிய சூழ்நிலைகளின் உச்சக்கட்டமாகக் கொழும்பின் வெலிக்கடை சிறைச்சாலையில் கைது செய்யப்பட்டு அடைக்கப்பட்டிருந்த 53தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம். 1983யூலை 25ஆம் 27ஆம் திகதிகளில் இக் குரூரங்கள் இடம்பெற்று மனிதப் பண்பாட்டினைக் கேள்விக்குரியதாக்கின. 1983யூலை 24இல் கொழும்பிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் நடைபெற்ற இனரீதியிலான வன்முறைக் கொடுமைகள் மிகப்பலவாகும். கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழினக் கொலையின்போது பல இடங்களில் அரச ஆயுதப்படையும் காடையர்களுடன் இணைந்து தமிழர்களையும் அவர்கள் உடைமைகளையும் தாக்கினார்கள் என்று தமிழர் தரப்பின் குற்றச்சாட்டுக்கள் தெரிவித்தன. சில தினங்கள் மௌனமாயிருந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா அவர்கள், தமது மௌனத்தைக் கலைத்துச் சிங்களவருக்கு உற்சாகமூட்டும் விதத்தில் உரையாற்றினாரென்றும், தமிழர்கள் தனிநாடு கோருவதை அரசியல் யாப்பின்மூலம் தடைசெய்யப்போவதாகக் கூறினாரென்றும் சொல்லப்பட்டது.


இதையடுத்த காலப்பகுதிகள் இருள்நிறைந்ததாகவே தொடர்கின்றன. இளைஞர் போராளி இயக்கங்களின் தீவிரங்கள் அதிகரித்தன. மாறாக அரச ஒடுக்குமுறைகளும் வேகங் கொண்டன. வன்முறைகள் தலைவிரித்தாடின. வடக்குக் கிழக்குப் பகுதி அமைதிகுன்றிய பிரதேசமாயிற்று. அரசபடையினரின் செயற்பாடுகள் பலகோணங்களில் விமர்சிக்கப்பட்டன. அதேபோன்று போராளிகளினதும் நடைமுறைகள் பலவும் விமர்சிக்கப்பட்டன. பொதுமக்கள் தாங்கொணா இன்னல்களுக்கு ஆளாகினர். பல்லாயிரக்கணக்கில் தமிழ்பேசும் மக்கள் அகதிகளாகக் கடலைக்கடந்து இந்தியாவின் தமிழகத்துக்கு ஓடினர். மேலும் ஒரு தொகையினர் மேற்கத்தைய நாடுகளுக்குப் பயணமாயினர். இன்னும் தொடர்ச்சியாக இடம்பெறும் அனர்த்தங்களினால் உள்நாட்டு அகதி முகாம்கள் பெருகின. பெருமளவில் மக்கள் வன்முறைகளுக்குப் பலியாகினர். அங்கவீனமடைந்தனர். மனநோயாளிகளாயினர். இத்தகைய சூழ்நிலைகளின் தாக்கத்திற்கிடையில் இயக்க மோதல்களும் இடம்பெறாமலில்லை. ஆனாலும் போராளிகளுடன் பொதுமக்கள் இணையும் வேகமும் அதிகரித்தே சென்றது. கைதுகளும், கொலைகளும், காட்டிக் கொடுப்பனவுகளும் தொடர தமிழ் பேசும் மக்களின் அமைதியும் எட்டியே செல்கின்றமை துரதிஷ்டவசமானதாகும்.

(தொடரும்)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

### ஒன்பதாம் திருவிழா



## அருள்தர வேண்டும்

அருள்தர வேண்டுமம்மா-நயினைமாதா
பெருந்துன்பம் நீங்கிடவே-(அருள்)

மருள்நிறை வாழ்வினில் மூழ்கித் தத்தளிக்காது
இருள் எனும் ஆணவம் நீங்கிவாழ்வுபெற (அருள்)

பேராசைப் பிணியது பீடித் தலைத்திடாது
தீராத தீவினை என்னை அலைத்திடாது

நேரான நல்வழி தன்னையே எய்திட
கூரான எண்ணத்தை அளித்து உய்திபெற (அருள்)

கவிமணி கந்த முருகேசதாசனார்

## அகரமும் சிகரமும்

அகரம் வேண்டும் நாக பூசணி
ஆணவம் வேண்டாம் நாக பூசணி
சிகரம் வேண்டும் நாக பூசணி
சிறுமை வேண்டாம் நாக பூசணி
பொறுமை வேண்டும் நாக பூசணி
பொறாமை வேண்டாம் நரக பூசணி
இறைமை வேண்டும் நாக பூசணி
ஏழ்மை வேண்டாம் நாக பூசணி

நல்லை அமிழ்தன்

## அல்லலகற்றி ஆதரிப்பாய் தாயே

நயினையில் கோயில்கொண்ட நாகம்மா தாயே
நிம்மதியை வேண்டி இறைஞ்சுகிறோம் தாயே
அச்சமற்று வாழ வழி காட்டிடு தாயே
அல்லலகற்றி எம்மை ஆதரிப்பாய் தாயே

உடுவில் சமூகஜோதி கா.கணேசதாசன்

## கலையாவும் தந்தெமக்கு காட்சி தருவாயம்மா

முன்னிலை

அகிலமெங்கும் உந்தன் ஆட்சியம்மா-நயினை
நாக பூஷணியே மீனாட்சித் தாயே
(அகிலமெங்கும்...)

இடைநிலை

அலைகடல் ஆர்ப்பரித்து ஆடி அசைந்துவர
கலையாவும் தந்தெமக்கு காட்சி தருவாயம்மா
(அகிலமெங்கும்...)

பின்னிலை

நிலையிலா வாழ்க்கையிலே நித்தம் உனைத்தொழுது
நின்னடியே சேவிக்க நீயருள்வாய்
மலையென இன்பதுன்பம் வந்தெமை வாட்டினாலும்
மறவாதுன் சந்நிதியில் போற்றி நின்றோம்.
(அகிலமெங்கும்...)

சங்கீத கலாவித்தகர்
எஸ்.சிவானந்தராஜா

# உலக பொருளாதாரப் பிரச்சினைக்கு ஐ.நா.சபை தீர்வு காணவில்லை

(துபாய்)

ஐ.நா.பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து எந்த நாட்டுக்கும் தரக்கூடாது என்று டோகா நாட்டின் தலைநகர் குவாட்டரியில் ஜி.77 நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ள வந்த பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி கசூரி துபாயில் ஒரு பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

அவர், மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐ.நா.பாதுகாப்பு சபையில் எந்த நாட்டுக்கும் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கொடுப்பதை எதிர்க்கிறோம். பல நாடுகள் ஐ.நா சபையில் நிரந்தர உறுப்பினர் பதவி வேண்டும் என்று கோரிக்கை வைத்துளளன. அவை பாகிஸ்தானின நட்பு நாடுகள. சில நாடுகள் பாகிஸ்தானில் வளர்ச்சித் திட்டங்களுக்க முதலீடு செய்துள்ளன.

பொதுவாக எந்த நாட்டுக்கும் பாதுகாப்பு சபையில் புதிதாக நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து தரக்கூடாது என்பது எங்கள கொள்கை.

நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து கேட்டு இநதியா கோரிக்கை வைத்து உள்ளதறகும் எங்கள் கொள்கைக்கும் சம்பந்தம் இல்லை. ஐ.நா சபையை சீர்திருத்த யோசனை கேட்ட காலகட்டத்தில் பாதுகாப்பு சபையில் நிரந்தர உறுப்பினர் கோரிக்கை வைப்பது பரிதாபம்.

ஐ.நா.சபையை தொடங்கி 60 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதனால் அதைச் சீர்திருத்த வேண்டும். அதன் சாதனை என்ன? தோல்வி என்ன? பலவீனம் என்ன? என்று கண்டறிய வேண்டும். எதிர்பார்த்த அளவு ஐ.நா.சபை இல்லை என்று பல நாடுகள் கருதுகின்றன. ஐ.நா.சாசனத்தில் இருநது விலகிச்செல்வதாகவும் கருதுகிறார்கள்.

உலக பொருளாதார பிரச்சினைக்கு ஐ.நா.சபை தீர்வு காணவில்லை. பாதுகாப்புச சபை செயல்பாடும் செம்மையாக இல்லை என்றும் கூறியுள்ளார். (அ)

## இந்தியாவில் 55 பேர் வெயிலுக்குப் பலி

(புதுடில்லி)

தமிழ்நாட்டைப் போல வடஇந்தியாவிலும் தற்போது கடும் வெயில் கொளுத்தி வருகிறது.ஒரிசாவில் வெளிலுக்கு பலியானவர்கள் எண்ணிக்கை தற்போது 55 ஆக உயர்ந்துள்ளது.

உத்தர பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களிலும் நேற்று முன்தினம் 45 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெயில் வாட்டியது. வட இந்தியாவல் நேற்று முன்தினம் மேலும் 6 பேர் வெயில் தாக்கி பரிதாபமாக இறந்தார்கள். (அ)

## அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனம்

# செவ்வாய் கிரகப் பாறைகளுக்கு இந்தியர் பெயர்களை சூட்டியுள்ளது

(கொல்கத்தா)

செவ்வாய்க் கிரகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 3 பாறைகளுக்கு இந்தியப் பெயர்கள் சூட்டியுள்ளது அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா. அந்தப் பாறைகளுக்கு தமிழர்களின் பண்டிகையான பொங்கல், இந்தியாவின் பழம்பெரும் பல்கலைக்கழகமான நாளந்தா, விலைமதிக்க முடியாத கோகினூர் வைரம் எனப் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நாசா அதிகாரிகள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளனர். (அ)

# பேரழிவு ஆயுத ஒழிப்பு வெறும் கானல் நீர்

## ரஷ்யாவில் சோனியா காந்தி

(மொஸ்கோ)

பேரழிவு ஆயுத ஒழிப்பு வெறும் கானல் நராக உள்ளதாக ரஷயாவில் சுறறுப் பயணம மேற்கொண்டுள்ள காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி பேசும் போது தெரிவித துள்ளார்.

தொடர்ந்து பேசிய சோனியாகாந்தி, உலகம் முழுவதும் பிரிவினைவாத சக்திகளும, வெறுப்புணர்வும் பரவிக்கிடக்கின்றன. உலகநாடுகள் அமைதியாக வாழ்வதையும், உலக மக்கள் அமைதியாக வாழ்வதையும் அந்த சக்திகள் விரும்பவில்லை.

பல இடங்களில் வன்முறையும், தீவிரவாதமும் தலைவிரித்தாடுகின்றன. இந்த வன்முறையில் பெண்களும், குழந்தைகளும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தியாவும், ரஷயாவும் தீவிரவாத சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தீவிரவாதத்தை ஒழிப்பதில் இரு நாடுகளும் இருங்கிணைந்து செயல்பட உறுதி பூண்டுள்ளன.

இந்தியாவில் பல்வேறு மொழி, கலாசாரங்களைக் கொண்ட மக்கள் வாழ்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் 'வேற்றுமையில் ஒற்றுமை' என்ற தாரக மந்திரத்தின் அடிப்படையில் கடந்த 55 ஆண்டிற்கும் மேலாக இந்திய மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

உலகளாவிய அளவில் பேரழிவு ஆயுதங்களை அழிக்கவேண்டும் என்று கடந்த 1988ஆம் ஆண்டே அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி ஐ.நா சபையில் தீர்மானம் கொண்டுவந்தார். அந்தத் திட்டம் இன்றைக்கும் பொருந்துவதாக உள்ளது. ஆனால் உலகளாவிய அளவில் பேரழிவு ஆயுத ஒழிப்பு கானல் நீராகவே இருந்து வருகிறது.

இந்தியாவுககும் ரஷயாவுககும் இடையே நீண்டகால பந்தம் உள்ளது. ரஷய எழுததாளர் லியோ டால்ஸ்டாய் எழுதிய 'அன டு தி லாஸ்ட்' என்ற புத்தகத்தைப் படித்த பின்னர்தான் இந்திய தேசப் பிதா மகாத்மா காந்தி சமூக வாழ்க்கையில் தீவிர மாக இறங்கினார் என்று கூறியுள்ளார். (அ)

# பிலிப்பைன்ஸில் தாக்குதல் 12 இராணுவத்தினர் பலி

## பலர் காணாமல் போயுள்ளனர்

(மணிலா)

பிலிப்பைன்ஸில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் 12 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பிலிப்பைன்ஸின் வடக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

12 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டமையை அந்த நாட்டு இராணுத்தினரும் பொலிஸாரும் உறுதி செய்துள்ளனர்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது 14 இடதுசாரித் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அதற்குப் பழி தீர்க்கும் வகையிலேயே நேற்றைய தாக்குதல் மேற்கொளளப்பட்டதாகத் தெரியவருகிறது.

நேற்றைய தாக்குதல் சம்பவத்தின் போது பல இராணுவ வீரர்கள் காணாமல் போயுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

1969ஆம் ஆண்டு முதல் பிலிப்பைன்ஸில் இடம்பெற்றுவரும் இடதுசாரித் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் இதுவரை சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தககது. (ற-2)

# அனைத்து குற்றச்சாட்டிலிருந்தும் மைக்கல் ஜாக்சன் விடுதலை

(வோஷிங்டன்)

பிரபல பொப் பாடகர் மைக்கல் ஜாக்சன சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவின் கலிபோர்னியா சாந்த மரியா நதிமன்றத்தில இடம்பெற்ற அவருக்கு எதிரான சிறுவர் துஷ்பிரயோக வழக்கில் அவர் குற்றமற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பதின்மூன்று வயதுச் சிறுவனை மது போதைக்கு உட்படுத்தி அவரைத் தன்வசப் படுத்தித் துஷ்பிரயோகம் செய்தார் என மைக்கல் ஜாக்சன் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

தமது விடுதலை குறித்து மைக்கல் ஜாக்சன் எதனையும் குறிப்பிடாவிட்டாலும் அவரது சட்டத்தரணி 'நீதி பாதுகாக்கப்பட்டுள்ளது' எனத் தெரிவித்துள்ளார். (ற-2)

## குவைத்தின் முதல் பெண் மந்திரி

சவூதி அரேபியா, எகிப்து, குவைத் போன்ற நாடுகளில் இப்போது பெண்களுக்குச் சம உரிமை வழங்கப்பட்டு வருகிறது. ஓட்டுரிமையும் அவர்கள் தேர்தலில் நிற்கவும அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

குவைத்தில் முதல் முதலாகப் பெண ஒருவர் மந்திரியாக நியமிக்கப்படடுள்ளார். மவுசுமா அல் முபாரக் என்ற அந்தப் பெண் திட்ட மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (ற)

# மலேசியாவின் முதல் நீர்மூழ்கிக்கப்பல்

(கோலாலம்பூர்)

மலேசியாவின் முதல் நீர்மூழ்கிக்கப்பல் 2009ஆம் ஆண்டின் மத்திக்குள் தயாராகிவிடும் என துணைப் பிரதமரும், தற்காப்பு அமைச்சருமான டதுக் ஸ்ரீ நஜீப் துன் ரசாக் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கப்பல் கட்டுமான நிறுவனம் ஒன்றும் மலேசியாவும் இணைந்து மேற்கொள்ளும் இக்கட்டுமானப் பணி 36சதவீதம் நிறைவு பெற்றுள்ளது.

பிரான்ஸில் நடைபெறறுவரும் அந்நீர்மூழ்கிக் கப்பலின் கட்டுமானத்தைப் பார்வையிட்ட பின்னர் துணைப்பிரதமர் இதைத் தெரிவித்தார்.

அந் நிறுவனத்தின் நீர்மூழ்கிப் பயிற்றச் பள்ளியில் பயின்று வரும் 70 பயிற்சியாளர்களையும் அவர் சந்தித்து உரையாடினார.

அந்தப் பயிற்சியாளர்களுக்கு நீருக்கடியில் வழங்கப்படும் பயிற்சிகளும் முழுமையாக அளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# சீனாவில் தொடர்மழை; நதிகள் உடைப்பு 87 குழந்தைகள் உட்பட 400 பேர் பலி

## உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாமென அச்சம்

(பீஜிங்)

சீனாவில் தொடர் மழையால் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் சிக்கி பள்ளிக் குழந்தைகள் 87பேர் உட்பட 400பேர் பலியாகியுள்ளனர். இத்தொகை மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகிறது.



சீனாவில் ஹீலாங்ஜியாங் மாகாணத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால், நிங் ஆன் நகரம் அதனை சுற்றியுள்ள கிராமங்கள் வெள்ளத்தால் சூழ்ந்துள்ளன.

இங்குள்ள கிராமத்தில் 55வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. இதே பகுதியில் உள்ள ஆரம்ப பள்ளியில 350 குழந்தைகள் படித்து வந்தனர். 31 ஆசிரியர்கள் பணியில் இருந்தனர். இந்தப் பள்ளியை ஆறடி உயரத்துக்கு வெள்ள நீர் சூழ்ந்ததில் சுவர் இடிந்து விழுந்தது. இந்த சம்பவத்தில் 87பள்ளிக் குழந்தைகள் உட்பட 91பேர் பலியாயினர்.

சம்பவ இடத்தை ஹீலாங்ஜியாங் மாகாண கவர்னர் பார்வையிட்டு நிவாரணப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளார.

தெற்கு சீனாவில் [illegible]ந்த சில வாரங்களாக பெய்துவரும் பலத்த மழையினால் பல நதிகளில் வெள்ளம் அபாயக்கட்டதைத் தாண்டி உடைப்பெடுத்துள்ளன.

400ஐக்கும அதிகமானவர்கள் பலியாகியுள்ளனர். ஒரு இலட்சத்[illegible] ஆயிரம் வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது. (ற)

# இந்திய - பாகிஸ்தான் உடன்பாட்டுக்கு உலக நாடுகளின் உத்தரவாதம் தேவை

## ஹுரியத் கோரிக்கை

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் கட்டம் நெருங்கி வருகிறது. இந்த விஷயத்தில் அடுத்த ஆண்டு முக்கியமானதாக இருக்கும. அப்போது இந்தியா - பாகிஸ்தான காஷ்மீரிகள் இடையே ஏற்படும் எந்த ஒரு உடன்பாட்டுக்கும் சர்வதேச சமுதாயம் உத்தரவாதம அளிக்க வேண்டும்.

இவ்வாறு பாகிஸ்தான் சென்றுள்ள ஹுரியத் மாநாடு மிதவாதப் பிரிவு தலைவர்கள் கூறியுள்ளனர்.

ஹுரியத் தலைவர் மிர்வாய்ஸ் உமர் பாரூக் பாகிஸ்தானின் டான் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில்,

இந்தியா - பாகிஸ்தான் இடையே காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டால் அதற்கு உத்தரவாதம் அளிக்கும் நாடாக சீனா இருக்கலாம். ஏனெனில், அதற்குச செல்வாக்கும் உள்ளது. பங்கும் உள்ளது.

ஹுரியத் தலைவர்கள் பாகிஸ்தான் செல்ல இந்தியா அனுமதி அளித்தது, அதன் நிலையில் ஏற்பட்ட மாற்றத்தை இது காட்டுகிறது. பிரச்சினையின் தீர்வுக்குப் பல வழிகளை ஆராய்கிறோம். இப்போது அதிகாரப் பரவல் குறித்து அதிகம் பேசப்படுகிறது. காஷமீர் பிரச்சினையில் இந்த வழியைப் பின்பறறலாமா என்று யோசிப்போம். கூட்டமைப்பு யோசனை குறத்தும பேசுவோம். இதுபோன்ற பல வழிகள் உள்ளன. இப்போதுதான் பயணத்தை தொடங்கியுள்ளோம். வழிநெடுகிலும் எவ்வளவோ யோசனைகள், திட்டங்கள் வரலாம். அவை குறித்து ஆலோசிப்போம்.

57 ஆண்டுகளுக்குப்பின் காஷ்மீரிகள் ஒன்றாக அமாநது பேச வாய்ப்புத் தரப்பட்டுள்ளது. சமாதான முயற்சிக்கான இப்பணிக்கு இடையூறு எதுவும் இனி ஏற்படாது என்று நினைக்கின்றோம்.

இரு புறத்திலும் உள்ள காஷமர் இடையே மேலும் பல வழிகள் போக்குவரத்துக்கு திறக்கப்பட வேண்டும். காஷ்மீர் மக்கள் இடையே தொடர்பு அதிகரிப்பது பிரச்சினையை எளிதில தர்க்க வழிவகுக்கும் பாகிஸ்தான் அதிபர் முஷாரபபிடம் இக்கோரிக்கையை முன்வைததுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார. (ற)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல் - குறள்

வலம்புரி

# கூடாதகூட்டம் கூடினால்...

கெடுகுடி சொற்கேளாதென்பது தமிழ் பழமொழி. இந்தப் பழமொழி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு நன்கு பொருந்தும்.

விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொள்கின்றது என்ற ஒரே காரணத்திற்காக அந்த அரசை தனக்கிருக்கக்கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைத்தார்.

என்னபாடுப்பட்டாவது ஆட்சிபீடத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதற்காக ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தார்.

ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சில மூத்த உறுப்பினர்கள் பலமாக எதிர்ப்புத் தெரிவித்தனர். இருந்தும் ஜனாதிபதி அதனைப் பொருட்படுத்தவில்லை.

ஜனாதிபதியின் பிள்ளைகள்கூட ஜே.வி.பியினுடனான உறவை எதிர்த்தனர். தமது தந்தையாரைக் கொலைசெய்த ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வதற்கு ஜனாதிபதியின் பிள்ளைகள் எதிர்த்தும் அது பயனற்றுப்போயிற்று.

சமாதானத்தைக் கடுமையாக எதிர்த்துவந்த ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்த ஜனாதிபதி சமாதான வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பேன் எனவும் உறுதிகூறினார்.

சமாதானத்திற்கு விரோதமான ஓர் கட்சியுடன் கூட்டுவைத்துக்கொண்டு சமாதானத்தை சாதிக்க முடியுமென்ற கேள்விக்கணைகள் ஜனாதிபதியை நோக்கி விடப்பட்டன.

அதற்குப் பதிலளித்த அவர், ஜே.வி.பியை எவ்வாறு அடக்குவதென எனக்குத் தெரியும் எனக் கூறினார். ஜே.வி.பியை அடக்குவேனெனக் கூறிய ஜனாதிபதி, அதனை எவ்வாறு செய்வதெனக் கூறவில்லை.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைக்கவேண்டும், தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும் என்ற பேராசையுடன் செயற்பட்ட ஜனாதிபதி யாருடனும் கூட்டுச்சேர்வதற்குத் தயாராகவிருந்தார்.

இந்நேரத்தில் துரியோதனுக்கு வாய்த்த சகுனி போல ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அவரது சகோதரன் அநுரா பண்டாரநாயக்கவின் ஆலோசனை கிடைத்தது.

அரசியலுக்கே தகுதியற்ற அனுரா, தன்னலங் கருதி ஜே.வி.பியுடன் கூட்டுச்சேருமாறு தனது சகோதரிக்கு அழுத்தம் கொடுத்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தானே ஜனாதிபதி வேட்பாளர் என்ற நினைப்பிலும், தனக்கு ஜே.வி.பியின் ஆதரவு கிடைக்கும் என்ற கற்பனையிலும் திளைத்த அநுரா பண்டாரநாயக்கவின் குறுகிய சிந்தனைக்கு சந்திரிகா குமாரதுங்கவும் உடன்பட ஜே.வி.பியுடனான கூட்டுச் சாத்தியமாயிற்று.

கெட்டவனின் சகவாசம் என்னசெய்யும் என்பதை அறிவதற்கு பதினைந்து மாதங்கள் மட்டுமே போதுமாயிருந்தது. பொதுக்கட்டமைப்பு என்ற பேரில் ஜே.வி.பியின் இடுக்கண் ஜனாதிபதியைத் தாக்கத் தொடங்கியுள்ளது.

இந்தத் தாக்கம் நாட்டில் மீண்டுமோர் தேர்தல் என்ற நிலைக்குத் தள்ளியுள்ளது. வருடமொரு தேர்தல் நடத்துவதே இலங்கையின் ஜனநாயகக் கலாசாரம் என்பதாக நிலைமை மாறிவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி முன்னணி அரசுக்கு சந்தர்ப்பம் கொடுக்காத ஜனாதிபதி, இப்போது தான் விதைத்த வினையை அறுவடைசெய்ய ஆரம்பித்துவிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜனாதிபதிப் பதவியிலும், ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற ஆட்சியிலும் இருக்கின்றபோதே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது சுலபமானதென்ற அரசியல் அவதானிகளின் கருத்தை சிதைத்தவர் சந்திரிகா குமாரதுங்க.

அன்று ஆட்சிக் கலைப்பு செய்யாமால் இருந்திருந்தால், இன்று இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டிருக்கக்கூடும். எல்லாவற்றையும் பதவிவெறிகொண்டு செய்துவிட்டு கூடாத கூட்டம் கூடினால் இப்படித்தான் போட்டுடைக்க வேண்டிவரும்.

இது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசியல் வாழ்க்கைக்கு மட்டுமல்ல, நம் எல்லோரினதும் நிஜவாழ்க்கைக்கும் பொருத்தமுடையதாகும்.

# இலங்கை தமிழர்கள் உரிமையுடன் வாழும் நிலையை இந்தியா ஏற்படுத்தவேண்டும்

இலங்கை-இந்திய இராணுவ ஒப்பந்தத்திற்கு தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதாக தமிழ்நாட்டின் பட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய மத்திய அரசுக்கு ஆதரவுஅளித்துவரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் ஏற்கனவே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள நிலையில் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள பட்டாளி மக்கள் கட்சியும் தற்போது எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா வழங்கும் இராணுவ உதவியை இலங்கையில் சிறுபான்மையினராக உள்ள தமிழர்களுக்கு எதிராகவே அந்நாடு பயன்படுத்தும்.

அத்தகைய நிலையில் மீண்டும் இலங்கையிலிருந்து பெருவாரியான தமிழர்கள் இந்தியாவில அகதிகளாக தஞ்சம்புகும் ஆபத்து இருக்கிறது. ஏற்கனவே இங்கு அகதிகளாக வந்துள்ள தமிழர்கள் இன்னும் தாயகம் திரும்பாத நிலையில் மேலும் பல இலட்சம்பேர் அகதிகளாக வரும் நிலைமை ஏற்பட இந்தியா எந்த வகையிலும் காரணமாக இருந்துவிடக்கூடாது எனத் தெரிவித்தார்.

ஆகவே, இலங்கை அரசுக்கு எத்தகைய இராணுவ உதவிகளையும் வழங்காமல் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் இந்தியா ஈடுபடவேண்டும்.

அதன்மூலம் இலங்கைத் தமிழர்கள் வாழவுரிமை, கலாசார, பண்பாட்டு உரிமை, மொழி உரிமை உட்பட அனைத்து உரிமைகளுடன் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி இலங்கை பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண இந்தியா நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்.

அதுவரையில் இலங்கையுடன் எத்தகைய பாதுகாப்பு உடன்பாட்டையும் செய்து கொள்வதை இந்தியா தவிர்க்க வேண்டும். இது இந்திய தமிழர்கள் உள்ளிட்ட உலகத் தமிழர்களின் எதிர்பார்ப்பு ஆகும் என அவர் அவ்வறிக்கையின்மூலம் மேலும் தெரிவித்துள்ளார். (அ-4)

# பொதுக்கட்டமைப்புக்கு எதிரான கொள்கைகளால் நாடு பெரும் அசௌகரியமான நிலைமைக்குள்!

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக அரசாங்கத்தில் எழுந்துள்ள கொள்கைகள் தொடர்பாக நாடு மிகவும் அசௌகரிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன குற்றம்சாட்டியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பினை செயற்படுத்துவது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்களுக்கும், பிரதியமைச்சர்களுக்கும் இடையில் வாத, பிரதிவாதங்கள் உருவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஜே.வி.பி தனது கொடுங்கோல் ஆட்சி மூலம் நாட்டினை சீர்குலைத்துவிடுவதோடு கூட்டணிக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினையும் குழப்பிவருகின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் குழம்பிப்போயிருக்கும் ஜனாதிபதி எவ்வாறு பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவது? எவ்வாறு சமாதானத்தை உருவாக்குவது? எனவும் ராஜித சேனாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.(ற-4)

# காரைநகர் உதவி அதிபர் பிரிவில் கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் தேசிய கலை இலக்கியப் போட்டிகள் அண்மையில் காரைநகர் கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. கட்டுரை, கவிதை, சிறுகதை, சித்திரம், நாட்டுப்புறப் பாடல் போன்ற போட்டிகள் சிரேஷ்ட பிரிவு, கனிஷ்ட பிரிவு, திறந்த போட்டி போன்ற நிலைகளில் நடைபெற்றன. இப்போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

**நாட்டுப்புறப்பாடல் (கனிஷ்ட பிரிவு)**

1ஆம் இடம் கு.சுஜாதா வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் ச.கிருஷ்ணவேணி யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.

3ஆம் இடம் க.விஜி கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர்.

**நாட்டுப்புறப்பாடல் (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம் ச.சரிதா கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் சி.பத்மலோஜினி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் காரைநகர்.

3ஆம் இடம் கோ. சுகந்தினி யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.

**நாட்டுப்புறப்பாடல் (திறந்தபோட்டி)**

1ஆம் இடம் ஐ.சிவகலா சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் காரைநகர்.

1ஆம் இடம் க.யோகராணி வியாவில் சைவ வித்தியாலயம் காரைநகர்.

**சித்திரப்போட்டி (கனிஷ்ட பிரிவு)**

1ஆம் இடம் ந. புஸ்பமேனன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் ச.பிரவீனன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர்.

3ஆம் இடம் க.பாலகுமார் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

**சித்திரப்போட்டி (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம் செ.ஐங்கரன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் சு.கோபாலன் கலாநிதி ஆ. தியாகராஜா ம.ம வித்தியாலயம் காரைநகர்.

3ஆம் இடம் கி.தேவதீசன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

**சித்திரப்போட்டி (திறந்தபோட்டி)**

1ஆம் இடம் சோ.கோகிலன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் இ.திருக்குமரன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

3ஆம் இடம் ரே.நிலவன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர்.

**கட்டுரைப்போட்டி (கனிஷ்ட பிரிவு)**

1ஆம் இடம் இ.இராஜேஸ்வரி கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் ப.பவிதா யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.

3ஆம் இடம் தி.நந்தகோபால் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

**கட்டுரைப்போட்டி (சிரேஷ்ட பிரிவு)**

1ஆம் இடம் அ.சிவகலா கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் பே.ராஜினி கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர்.

3ஆம் இடம் அ.காயத்திரி கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

**கவிதை (திறந்த போட்டி)**

1ஆம் இடம் இ.பகிப்பிரியா கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம் தி.நந்தகோபால் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வித்தியாலயம் காரைநகர்.

3ஆம் இடம் சோ.தஜந்தினி யாழ்ற்ரன் கல்லூரி காரைநகர்.

**சிறுகதை (திறந்தபோட்டி)**

1ஆம் இடம் ஆ.சிவகலா கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர்.

2ஆம் இடம்:- அ.காயத்திரி கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர்.

3ஆம் இடம்:- பே.ராகினி கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம. வித்தியாலயம் காரைநகர். (அ-246)

# பாரிய அடிப்படையில் தூறல் நீர்ப்பாசனம்

(மருதங்கேணி)

யு.என்.பி.திட்டத்தின் கீழ் வடமராட்சி பகுதியில் பாரிய அடிப்படையில் 20 விவசாயிகளுக்கு 4 பரப்பில் பயிர்ச்செய்கைக்குரிய தூறல் நீர்ப்பாசனக் கருவி புலோலி கமநல சேவை திணைக்களத்தினால் பொருத்தப்பட்டுள்ளது.

அம்பன் கமநல சேவை பகுதியில் 7 பேருக்கும், புலோலியில் 13பேருக்கும் இக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம் குறைந்த அளவு நீரில் கூடிய பயிர்ச் செய்கை செய்வதோடு உற்பத்திச் செலவையும் குறைத்துக்கொள்ளலாம்.

இதறகாக மானிய அடிப்படையில் 14ஆயிரம் ரூபா வதம் வழங்கப்படுகிறது. மேலதிக விபரங்களை புலோலி பெரும்பாக உத்தியோகத்தர் ஆ.உருத்திரேசனுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (து-35)



# சாயி அருளமுதம்

திறந்த இதயம் உடையவராகுங்கள் அளவோடு அன்பு செலுத்தும் குறுகிய பாதையிற் செல்வதில் மகிழ்ச்சியுறாதீர்கள். எல்லோர் மீதும அன்பு செலுத்துங்கள் அதிகாரத்திலும் பதவியிலும் இருப்பவர்கள் மீது வெறுப்பை வளர்க்காதீர்கள். ஏனெனில் அவர்களும் நம் உற்றார் உறவினரே. நாங்கள் எல்லோரும் ஒருமித்துப் பயணிப்பவர்கள்தான். என்னைப் பற்றிய ஒரு உண்மையையிட்டு நம்பிக்கை கொண்டிருங்கள். தகுந்த காரணமின்றியும் சிறந்த பயன்களை விளைவிக்காததுமான எந்தஒரு கருமத்திலும் ஸ்வாமி கை வைக்க மாட்டார் என்பதே அது.

நன்றி
நாளாந்த நற்சிந்தனை

# மல்வத்தை பீடாதிபதியின் அழைப்பை உண்ணாவிரதப் பிக்கு நிராகரித்தார்!

உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு மல்வத்தை மகாநாயக்கரினால் நேற்று விடுக்கப்பட்ட வேண்டுகோளை தம்பர அமில தேரர் நிராகரித்தார்.

உத்தேசப் பொதுக் கட்டமைப்பைக் கைவிடுமாறு வலியுறுத்தி தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் இன்று 5ஆவது நாளாகவும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றார்.

மகாநாயக்கர்களின் அனுமதியின்றிப் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடமாட்டேன் என ஜனாதிபதி தங்களிடம் உறுதிமொழி வழங்கியிருப்பதாகவும், அதனால் அந்த உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுமாறும் மல்வத்தை மகாநாயக்கர் உண்ணாவிரதமிருக்கும் தம்பர அமில தேரருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

எனினும் அதனை ஏற்க மறுத்த அமில தேரர், ஜனாதிபதி இதுபோன்ற உறுதிமொழிகளை இதற்கு முன்னரும் வழங்கியிருப்பதனால் இதனை ஏற்கமுடியாதென்றும், பொதுக்கட்டமைப்பு யோசனை முழுதாக கைவிடப்படும் என ஜனாதிபதி உறுதியளிக்கும்வரை உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

உண்ணாவிரதம் இருக்கும் பௌத்த பிக்குவிற்கு ஆதரவு தெரிவித்து நேற்று மாலை கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக தேசிய பிக்கு முன்னணியினரால் ஏற்பாடுசெய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது. (ச-4)

# அனுமதிபெறாது அமைக்கப்பட்டுள்ள வணக்கஸ்தலங்கள் அகற்றப்படும்

## யாழ். மாநகரசபை அறிவிப்பு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள இந்து, கிறிஸ்தவ மற்றும் பௌத்த வணக்கஸ்தலங்கள் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் வகையில் அகற்றப்படவுள்ளதாக யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க. குணராசா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள மரம் ஒன்றின்கீழ் வைக்கப்பட்டிருந்த வைரவர்சூலம் ஒன்று நேற்று மாநகரசபையினரால் அகற்றப்பட்டு மாநகரசபையில் உள்ள கோயிலில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆரியகுளச் சந்தியிலுள்ள யாழ். நாகவிகாரை வளாகத்தினுள் அனுமதிபெறாமல் அமைக்கப்பட்டுவந்த கட்டடம் ஒன்றை யாழ். மாநகரசபையினர் இடைநிறுத்தியுள்ளனர்.

புதிய கட்டடம் அமைக்கப்பட்டுவருவதாக மக்கள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா, யாழ். மாநகரசபையின் சட்டத்தரணி இராஜரட்ணம், மாநகரசபை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டதுடன், யாழ். நாகவிகாரையின் விகாராதிபதியையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது அனுமதிபெறாமல் கட்டடம் எதுவும் கட்டமுடியாதெனவும், இதனால் கட்டடத்தை கட்டும் வேலைத்திட்டங்களை உடனடியாக நிறுத்தும்படி தெரிவித்தனர்.

இதனையடுத்தே அடுத்து அக் கட்டட வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டது. (ச-19)

# பொதுக் கட்டமைப்பை வலியுறுத்தி சாவகச்சேரியில் நேற்று உண்ணாவிரதம்

## இன்று கைதடியில் நடைபெறும்

பொதுக் கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்தும், சமாதான முயற்சிகளின் செயற்களை விரைவுபடுத்துமாறு வலியுறுத்தியும் சாவகச்சேரியில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடாத்தப்பட்டது. நேற்றுக்காலையிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

பேரினவாதிகளின் இனவாத செயற்பாடுகளைக் கண்டிப்பதோடு, சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதியை மீளக்கட்டியெழுப்புவதற்கு பொதுக்கட்டமைப்பினை உருவாக்குமாறு உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

உண்ணாவிரதம் மேற்கொண்ட உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இவ் அடையாள உண்ணாவிரதப் போராடம் காரணமாக சாவகச்சேரி நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன், இயல்புநிலையும் பாதிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை இவ்வாறான உண்ணாவிரதப் போராட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு ஏற்பாடு நடைபெற்றுவருவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இன்று கைதடிச் சந்தியில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. (ச-43,08)

## நிவாரணப் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்காக உலருணவு விநியோகத்திற்கான வழங்கற்கட்டளைகளை யாழ். மாவட்டச் செயலக புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் நாளை பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி ஒரேதடவையில் இரு மாதங்களுக்குமான விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச)

## மங்கள, அநுரா...

றுக்கிழமையன்று இலங்கை திரும்புவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் ஜே.வி.பிக்கும் இடையேயான இந்த முறுகல் நிலைக்கு முதன்மைக் காரணமாக இருந்த அமைச்சர் மங்கள சமரவீர சிக்கலான இந்த அரசியல் சூழலில் வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வது குறித்து அரசியல் அவதானிகள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். (ச-4)

## இராணுவக் ஹெலி...

எச்சரிக்கை விடுத்திருந்தனர்.

இதையடுத்து கண்காணிப்புக் குழுவினருக்கும் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டிற்கு இணங்கவே போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-4)

## ஐ.ம.சு. கூட்டமைப்பில் இருந்து...

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குப் பகுதி மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளுடன் இணைந்து மேற்கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருந்த பொதுக் கட்டமைப்பிற்கு எதிர்புத் தெரிவித்து, அதனைக் கைவிடுவதற்கு நேற்று நள்ளிரவுவரை ஜே.வி.பி, ஜனாதிபதிக்கு காலஅவகாசம் வழங்கியிருந்தது.

எனினும் பொதுக் கட்டமைப்பைக் கைவிடுவது குறித்து ஜனாதிபதியால் எவ்வித பதிலும் அளிக்கப்படவில்லை. ஆயினும் நேற்று ஜே.வி.பியின் பிர்சார செயலாளர் விமல் வீரவன்சவிற்கு ஜனாதிபதி கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்திருந்தார்.

அதில், அரசாங்கத்திலிருந்து விலகும் முடிவு காரணமாக நாட்டு மக்களுக்கு ஏற்படும் பாதகங்களுக்கு ஜே.வி.பியே பொறுப்பேற்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

பொதுக் கட்டமைப்பு விடயம் தொடர்பாக இன்னமும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும், பொதுமக்களுக்கும், ஏனைய கட்சிகளுக்கும் இது தொடர்பில் படிப்படியாக விளக்கங்கள் அளிக்கப்பட்டுவருவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

பொதுக் கட்டமைப்பு விடயத்தில் மகாநாயக்கர்களின் அனுமதியின்றி இறுதிமுடிவு எடுப்பதில்லை என்று இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக எந்தவொரு தகவல்களும் தெரியாதபோது அதுதொடர்பில் மக்களை ஆவேசப்படுத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயமல்ல என ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 20 வருட யுத்தம் காரணமாக இடம்பெற்றுவரும் அழிவுகளை நிறுத்தி சமாதான தீர்வுகாண்பதற்காக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது அவசியமாகும்.

இந்நிலையில் பொதுக் கட்டமைப்பு விடயத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த வித நிபந்தனைகளுமின்றி அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட முன்வந்தமையானது அரசாங்கத்திற்கு கிடைத்த பாரிய வெற்றியாகும் என ஜனாதிபதி தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதனை ஜே.வி.பி. ஏற்கமறுத்துள்ளது. பொதுக் கட்டமைப்பு என்ற ஒன்றை ஜனாதிபதி கைவிட்டால் மாத்திரமே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து ஆட்சி நடத்தமுடியுமென எனத் தெரிவித்து, காலக்கெடுவையும் விதித்திருந்தது.

அதனடிப்படையில் இன்று அரசிலிருந்து வெளியேறுவது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்பு இன்று காலை 10 மணிக்கு கொழும்பில் நடைபெறும் ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிடப்படும்.

ஜே.வி.பி. அரசிலிருந்து வெளியேறிய பின்னர் அரசியல் தளம்பல்கள் ஏற்பட்டு பாராளுமன்றம் கலைக்கப்படக்கூடும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (ச-8,4)

## பொதுக்கட்டமைப்பு...

அளிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் கருதுகின்றனரென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய சூழல் குறித்து சர்வதேச நாடுகளுக்கு விளக்கம் அளிக்குமாறு தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சர்வதேச உறவுகளுக்கான குழுவினரை விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இதனடிப்படையில் சர்வதேச அளவிலான பரப்புரை நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம் என்றார் அவர். (ச)

## ஜனாதிபதிக்கு...

நாமாச் செய்யவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கூறியுள்ளது.

ஜனாதிபதி ஒரு தலைவருக்குரிய தீர்மானம் எடுக்கும் பண்பில் ஜே.ஆர்.ஜெயவர்தன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை விட திறமையற்றவராகவுள்ளார். ஜனாதிபதி இன்னமும் தன்து சொந்தத் தீர்மானத்தை எடுக்காமலே இருக்கிறார். எனவே இதனை மக்கள் தீர்மானிக்கும்பொருட்டு ஜனாதிபதி தேர்தலை நடத்தவேண்டும்.

விலை அதிகரிப்புக்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் பொதுக்கட்டமைப்புப் பற்றிய தனது நிலைப்பாட்டை பிரதமர் ராஜபக்ஷ உடனடியாக வெளியிடவேண்டும் என்றும் ஐ.தே.க கூறியுள்ளது. (ச-6)

## கொலைக்குற்ற...

ததாக தெரிவித்து அவ்வூரைச் சேர்ந்த பூதத்தம்பி முருகநாதன், பூதத்தம்பி மகேந்திரன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவ்வழக்கு கடந்த 8ஆம் திகதிமுதல் யூரிசபையினர் முன்பாக யா்ழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் விசாரணைகள் நடைபெற்றது.

6ஆம் நாள் விசாரணை முடிவில் யூரி சபையினர் எதிரிகள் இருவரும் கொலைக் குற்றத்திற்கான குற்றவாளிகள் என ஏகமனதாக தீர்ப்புக் கூறியதையடுத்து நீதிவான் முதலாம், இரண்டாம் எதிரிகளான இருவருக்கும் மரணதண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

அரசாங்கத் தரப்பில் அரச சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமியும், எதிரிகள் தரப்பில் சட்டத்தரணி மு.சபாநாதனும் ஆஜராகி இருந்தனர். 20 வருடங்களுக்கு பின் யூரி சபையினர் முன் நடைபெற்ற வழக்கு இது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-19)

மனோகரா யாழ்.
ஸ்ரீகாந், கோபிகா, விவேக் நடித்த
கனா கண்டேன்

கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
எதிர்வரும் 17 முதல் அதிரடி வெளியீடு
சியான் விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ், கவுண்டமணி, சார்லி ஆகியோரின் சிறப்பு நடிப்பில்

அந்நியன்
www.dinakaran.com
இசை ஹரிஸ் ஜெயராஜ் இயக்கம் சங்கர்

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்டி பெண்டன்ஸ்டே டைரக்டர்
ரோலண்ட் எம்ரீக் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
விஜயகாந்த், மீனா,
நம்பியார் மற்றும் பலர்
நடித்த
சேதுபதி I.P.S
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)

எம்மிடம் சகல விதமான ரீவிக்களும், CD,VCD,DVD,PLAYER களும்,
சகலவிதமான றேடியோக்களும், மற்றும் மின்சார உபகரணங்களும்,
உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்
நியூ சித்ரா ரேடர்ஸ்
இல-185/1 கஸ்தூரியார் வீதி
T.P: 021 222 3226
(C- சு)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.